# யாழ். ஆஸ்பத்திரி நவீனமயமாகும்! ரூ.2லட்சம்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 270
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 23 றமழான் 9 திங்கட்கிழமை (9-11-70)

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 7-50 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்; தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஒதுக்கீடு

கொழும்பு, ஞாயிறு யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு நவீன வசதிகள்செய்து கொடுக்கப் படவுள்ளது. ஆப்பரேஷன் தியேட்டர்கள் குளிர்சாதன மூட்டப்படவுள்ளன. அரசாங்கம் இந்த நவீனமயமாக்கும் திட்டத்திற்கு வரவு- செலவுத் திட்டத்தில், 2லட்சத்து 34ஆயிரம்ரூபா ஒதுக்கியுள்ளது.

மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியும் நவீனமயப் படுத்தப்படவுள்ளது. அங்கும் ஆப்பரேஷன் தியேட்டர், குளிர்சாதன மூட்டப்படும்,

மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு1லட்சத்து 5ஆயிரத்து 695 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விரு ஆஸ்பத்திரிகளுக்கும் மின்சார உபகரண வசதி செய்துகொடுக்கவும் 20000 ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகியஇடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் மேலதிக மின்சார வசதி செய்து கொடுக்க ரூபா 2,500 செலவு செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, சங்கானை ஆஸ்பத்திரிகளுக்கு நீர் விநியோகம் செய்ய 8,500 ரூபா செலவு செய்யவும் தீர்மானித்துள்ளது. உடும்பராய் அரசாங்க சிகிச்சை நிலையத்துக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படவிருக்கிறது.

இந்த வசதிகள் யாவற்றையும் சுகாதார அமைச்சும், நீர்ப்பாசன மின்சார, நெடுஞ்சாலை அமைச்சும் செய்து கொடுக்கவிருக்கின்றன.

# தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நேர்முகப் பரீட்சை இல்லை!

## திறமைச் சித்தி அடிப்படையில் நியமனம் வழங்கப்படுமாம்

—மு. சின்னத்துரை—

கொழும்பு, ஞாயிறு

**தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்பதவிகளுக்கான நியமனங்கள் திறமைச் சித்தியின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளது. எவ்விதநேர் முகப்பரீட்சையும் நடக்கமாட்டாது.**

கல்வி அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி யொருவர் இந்தத்தகவலைத் தெரிவித்தார்.

ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்திபெற்றவர்களிடமிருந்து தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்பதவிகளுக்கு கிடைத்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து திறமைச் சித்தி அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்கல்விக் கந்...

பட்டியலை கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பும்படி கோரப்பட விருப்பதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

இவ் ஆசிரியர் பதவிகளுக்கு எவ்வித நேர்முகப்பரீட்சையும் நடைபெறமாட்டாதென்றும், கொழும்பு கல்வி அமைச்சு தலைமை அலுவலகத்தில் நியமனப்பட்...

## ஒவசியர்முறை ஒழிப்பைபின் போட்டால்வேலைநிறுத்தமாம்

கோட்டை, ஞாயிறு சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டபடி அரசாங்கம் மீண்டும் ஒவசியர் முறையை ஒழிக்கும் தீர்மானத்தை பின்போடுமானால் தாங்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கப் போவதாக பொதுவேலை இலாகா ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவசியர் முறை லஞ்ச ஊழல் நிறைந்திருப்பதாகவும் அதனால் பொதுமக்களின் பணம் வீணாக விரயமாகிறது எனவும் புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலைஅமைச்சர், ஒவசியர் முறையை ஒழிப்பதற்கு திட்டம் ஒன்று தயாரித்தார். இதற்கு எதிர்ப்பு பல இடங்களிலும் இருந்து கிளம்பியதால் இத்திட்டத்தை அமைச்சர் பின்போட்டார்.

எதிர்ப்புகளுக்கு இடம் கொடுக்காது இத்திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தவேண்டும் என 2500 பொதுவேலை இலாகா ஊழியர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர். அரசாங்கம் இந்த எதிர்ப்புகளுக்கு இடம் கொடுக்குமானால் தாங்கள் உடனடியாக வேலை நிறுத்தத்தில்இறங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்

இந்தத் தொழிற்சங்க அங்கத்தவருக்கு இவ்விலாகாவின் மற்றைய தொழிற்சங்க அங்கத்தவர்களும் ஆதரவு அளிப்பதாகத் தெரிய வருகிறது.

## உரும்பராய்—ஊரெழு ப. ச. தேர்தல்

### 22-ல் நியமனப்பத்திரம் தாக்கலாகும்

கட்டுப்பத்தை தொழில் நுட்பக்கல்லூரி

# காலவரையறையின்றி மூடப்பட்டது

## பொலிஸ்—மாணவர் கைகலப்பின் எதிரொலி

கொழும்பு, திங்கள் கட்டுப்பத்தை இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே இன்று பலத்த கைகலப்பு ஏற்பட்டது. மாணவர்களைக் கலைப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தில் கண்ணீர்ப் புகையும் பிரயோகிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

விஞ்ஞான ஆய்வு கூடம் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், அதிபருக்கு காயம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. மாணவர்களைக் கலைக்கச் சென்ற பொலிசாருக்கும், மாணவர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர் புகை பிரயோகித்தனர்.

தேவையான தராதரமில்லாதிருந்தும் தகுதியற்ற முறையில் 23 முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்து பொறியியல் துறை மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தது தெரிந்ததே.

# வேலைநிறுத்தம் செய்யும்போது ஸ்தாபனங்களை மூடப்படாது!

## விரைவில் சட்டம் வருகிறது

கொழும்பு,ஞாயிறு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது ஸ்தாபனங்கள் மூடப்படக் கூடாது என்ற சட்டம் விரைவில் கொண்டு வரப்படவிருக்கிறது. இத் தகவலை தொழில் அமைச்சர் இன்று ...

மன்றங்களைக் கலைத்து பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டினார்.

பழைய 100, 50 ரூபா நோட்டுக்களைப் பற்றிய செய்திகளை பத்திரிகைக...

யாழ்ப்பாணத்தில்

## அரிசி மூடைகள் கடலில் மூழ்கின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர், ஒவசியர் முறையை ஒழிப்பதற்கு திட்டம் ஒன்று தயாரித்தார். இதற்கு எதி

கத்தவருக்கு இவ்விலாகாவின் மற்றைய தொழிற் சங்க அங்கத்தவர்களும் ஆதரவு அளிப்பதாகத் தெரிய வருகிறது.

18 வயதுக்கு மேற்பட்ட

# எல்லோருக்கும் அடையாள அட்டை

கோட்டை, ஞாயிறு

இந் நாட்டின் 18-வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் அடையாள அட்டை வழங்குவது குறித்து ஆட்சிமன்ற ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இக் கூட்டத்திற்குத் தலைமை தங்கினர். மேற்படி குழுவின் அங்கத்தவர்கள் யாவரும் அரசாங்கம் சீராக நடைபெறவேண்டும் எனப் பிரதமர் இக் கூட்டத்தில் கூறினர். பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவைகளைத் திருத்தியமைப்பது குறித்தும், கிராமதொண்டர் சபைகளை மாற்றியமைப்பது குறித்தும் ஆராயப் பட்டது.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை பூரணமாகச் செயல்படுத்துவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

## ப. ச. தேர்தல்

### 22-ல் நியமனப்பத்திரம் தாக்கலாகும்

உடும்பராய், ஞாயிறு

உரும்பராய் — ஊரெழு பட்டினசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 22-ம் திகதி தாக்கல்செய்யப்படும்,

எட்டு வட்டாரங்களைக் கொண்டது இப் பட்டின சபை. தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் தங்களது ஆதரவிலான வேட்பாளர்களை ஒவ்வொரு வட்டாரத்திலும் நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது

## ரூ. 1,000 கடன் பெறலாம்

களனி, ஞாயிறு

வித்தியாலங்கார பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொருவரும் வங்கியிலிருந்து ஆயிரம் ரூபா கடன் பெறலாம். இதற்கான விண்ணப்பங்கள் ஒரு சில தினங்களில் மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## மாணவர் அவதி

மாவிட்டபுரம், ஞாயிறு

அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் பத்திரம் தனிச் சிங்களத்தில் இருப்பதால் அடையாள அட்டை பெறமுடியாது தமிழ் மாணவர்கள் கஷ்டமடைந்துள்ளனர். சில மாணவர்கள் சிங்களம் தெரிந்தவர்களை அணுகி நிரப்புவதாகத் தெரிகிறது.

பங்களைப் பரிசிலனை செய்து திறமைச் சித்தி அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.

ம[...]ட்டக்கல்விக் கந்தோ[...]க்கு கிடைத்த விண்ணப்பங்களை திறமைச் சித்தி அடிப்படையில் தயாரித்து இவ் ஆசிரியர் பதவிகளுக்கு எவ்வித நேர்முகப்பரீட்சையும் நடைபெறமாட்டாதென்றும், கொழும்பு கல்வி அமைச்சு தலைமை அலுவலகத்தில் நியமனப்பட்[...]ல் தயாராகும் என்றும் [...]வ் உயர் அதிகாரி கூறினர்.

# பொறுப்புபரீட்சைக்குதோற்ற உரிமை வழங்கல் வேண்டும்

கொழும்பு, ஞாயிறு

"ஆங்கிலம் தமிழ் மொழி மூலம் சேவையில் சேர்ந்துள்ள புதிய ஊழியர்களாகிய அஞ்சல் அதிபர்கள், கடைசிக் கெடுவாகிய 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதிக்குப் பின்னர் சிங்கள மொழியில் சித்திபெற்று, இழந்தவேதன உயர்களை மீளப் பெறுத போதும், சேவையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளவர்களை, பத்து ஆண்டுகள் அஞ்சல் அதிபரும் தந்தியாளருமாக சேவைபுரிந்த மட்டில் வேதன ஏற்றம் எத்தனை பெற்றிருந்த போதும் பொறுப்புப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமை வழங்கல் வேண்டும்,

அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கம் பொதுச் சபை மேற்கண்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

அஞ்சல் திணைக்களம் நடாத்தும் பொறுப்புப் பரீட்சைக்கு அஞ்சல் அதிபர்கள் இரண்டாம் தரத்தில் பத்து வருடங்கள் சேவை புரிந்ததோரும் ஒன்பது வருடாந்த வேதன உயர்வுகளைப் பெற்ருேருமே தோற்ற அருகதையுடையவர்கள், தமிழ் அஞ்சல் அதிபர்களைப் பொறுத்தவரையில் 10 வருட காலம் சேவை செய்த பல அஞ்சல் அதிபர்கள் ஒன்பது வருடாந்த வேதனஉயர்வுகளைப் பெறத் தவறி விட்டனர், ஏனெனில் அவர்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிங்கள பரீட்சையில் சித்தியடையவில்லை ஆகையினால் அவர்களுக்கு வருடாந்த வேதன உயர்வு கொடுக்கப்படவில்லை.

[ஊழியர்கள் வேலைநிறுத்]தம் செய்யும்போது ஸ்தாபனங்கள் மூடப்படக் கூடாது என்ற சட்டம் விரைவில் கொண்டு வரப்படவிருக்கிறது. இத் தகவலை தொழில் அமைச்சர் இன்று ஆட்சி மன்றத்தில் தெரிவித்தார்,

தொழில் அமைச்சர் இன்று ஆட்சி மன்றத்தில் பேசுகையில் கூறியதாவது:

தொழிலாளர்களைப் பாது[கா]ப்பதற்கான சட்டங்களை விரைவில் கொண்டுவரவிருக்கின்றேன் கம்பனிகளை முதலாளிமார் நினைத்தநேரம் மூடப்படுவதை தடை செய்யும் சட்டம் விரைவில் வரவிருக்கிறது. நான் தொழில் அமைச்சராகப் பதவிஏற்றகாலத்தில்தோட்டப்பகுதிகளில் 132 வேலை நிறுத்தங்களும் கைத்தொழில் பகுதிகளில் 49 வேலை நிறுத்தங்களும் நடந்து கொண்டிருந்தன. இவற்றில் முதலாவதில் 117ஐயும் இரண்டாவதில் 31ஐயும் சமரசமாகத் தீர்த்துவைத்துள்ளேன்,

கொழும்பு மத்தி எம்! பி ஆர் பிரேமதாசா பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் யு, என், பி கட்சி ஆதரவில் உள்ள உள்ளூராட்சி வசங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டினர்.

பழைய 100, 50 ரூபா நோட்டுக்களைப் பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் அரசாங்கத்துக்கு எதிராக பிரசுரிக்கக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருப்பதின் காரணம் என்ன என்று அவர் கேட்டார்,

யாழ்ப்பாணம், திங்கள்

மந்துவில் கொலைவழக்கு விசாரணை அடுத்தமாதம் 6-ம் திகதி கொழும்பு சுப்பிறிம் கோட்டில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில்

## அரிசி மூடைகள் கடலில் மூழ்கின

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் துறைமுகத்தில் அரிசி இறக்குமதி செய்கையில் 440 அரிசி மூடைகள் தவறி வீழ்ந்து கடலில் ஆழ்ந்துவிட்டதாகவும் இது எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றி விசாரணை நடந்துவருவதாகவும் அறியப்படுகிறது.

## சினிமா நடிகர்கள் ஒப்பந்தத்தில் கட்டுப்பாடு

சென்னை, நவ.8

ஒரே சமயத்தில் 9 படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் முன்னணி நடிகர்களையும் 15 படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் உப நடிகர்களையும் மேற்கொண்டு புதிய படங்களுக்கு ஒப்பந்தஞ்செய்யக் கூடாதென சென்னையில் நடைபெற்ற சினிமா தயாரிப்பாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இச்சங்கக் கூட்டத்துக்கு ஏ. வி. மெய்யப்பன் தலைமை வகித்தார்.

தென்னக திரைப்பட வர்த்தக சபைத் தலைவர் ஏ. எல். ஸ்ரீநிவாசன் இத் தீர்மானத்தை எல்லா தயாரிப்பாளர்களுக்கும் அறிவிப்பார்.

## யாழ். ஆஸ்பத்திரி தொழிலாளர் கமிட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் ஆஸ்பத்திரி ஆலோசனைக்குழு தேர்தல் இன்று நடந்தது. சாதாரண ஆண் பெண் சுகாதார சேவையாளர் பகுதிக்கு நான்குபேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் வருமாறு:

திருவாளர்கள் வி வல்லிபுரநாதன், பொ சுந்தரலிங்கம், இ புஷ்பராசா, ஆர் பிச்சன்.

சமையல் தொழிலாளர், ரசாயனச்சாலை கங்காணிமார் பகுதிக்கு திரு பி சத்தியாப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். ஆண் பெண் கங்காணிமார் பகுதிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆறுபேர்கள் வருமாறு: திருவாளர்கள் சீவரத்தினம், எஸ் சதாசிவம், எஸ் அருளப்பு, எஸ் பாலசுப்பிரமணியம், எஸ் கந்தசாமி, தேவநாயகி.

தலாவை ஒட்டுப்பலகை தொழிற்சாலையில்

## 2,500 பேருக்கு வேலை கிடைக்க வாய்ப்பு!

கோட்டை ஞாயிறு

அவிசாவலையிலுள்ள தலாவையில் நிர்மாணிக்கப்படும் ஒட்டுப்பலகைத் தொழிற்சாலையைப் பூர்த்தி செய்ய 4 கோடி 60 லட்சம் ரூபாவை அரசு செலவு செய்துள்ளது. கால்வாசிப் பகுதி பூர்த்தியாகிவிட்டது.

இந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கினுல், வருடமொன்றுக்கு 66 லட்சம் ரூபாவை அரசு பெற்றுக் கொள்ளுமென்றம், 2,500 வாலிபருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமென்றும் ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இந்திய வர்த்தகர்கள் நாடு திரும்ப முஸ்தீபு

### பிரஜாவுரிமை பெற்றவர்களும் போக விரும்புகின்றனர்

கொழும்பு, திங்கள்

இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர்கள் பலர் இலங்கையை விட்டுத் தாயகம் திரும்புவதற்கு முனைந்துள்ளனர், முன்னர் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்த இந்திய வம்சாவளி வர்த்தகர்கள் கூடத் தாயகம் திரும்புவதற்காக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் மனுச்செய்துள்ளனர், இலங்கைப் பிரஜாவுரிமை எடுத்தவர்களும் தங்கள் பிரஜாவுரிமையை ரத்துச் செய்துவிட்டு இந்தியா செல்வதற்காக மனுச்செய்துள்ளனர்.

வர்த்தகம் தொழில் ஆகிய துறைகளில் இலங்கை அரசாங்கம் பெருமளவில் கைவைக்க விருப்பதாலும் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தை அரசாங்கக் கூட்டுத்தாபனம் அடுத்தஜனவரி முதல் ஏற்றுக்கொள்ளவிருப்பதாலும் இவர்கள் இங்கிருந்து வெளியேற விரும்புவதாகக் கூறப்படுகிறது. இரத்தினக்கல் வியாபாரத்துடன் நகை வியாபாரம், ஈடுபிடிக்கும் தொழில் ஆகியவற்றை அரசு எடுக்கவிருப்பதாலும் இந்திய வம்சாவளி வர்த்தகர்கள் இங்கிருந்து வெளியேற முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த வர்த்தகர்கள் சம்பந்தமாகவும் இலங்கை அரசாங்கம் சமீபத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் இந்திய வம்சாவளியினரைப் பாதிக்கும் விஷயங்கள் பற்றியும் இந்திய அரசாங்கத்துடன் இந்திய தூதரகம் தொடர்பு கொண்டுள்ளது.

(பி. பி. ஏ.)

# மேதின ஊர்வல வழக்கு தள்ளுபடி; எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

மேதின ஊர்வல வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டு எதிரிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

1969-ம்ஆண்டு மேமாதம் முதலாம் திகதி சட்டவிரோதமான முறையில் ஊர்வலம் நடாத்தியதாக சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே.ஏ. சுப்பிரமணியம், கே. டானியல், மரைக்காயர், கௌரிகாந்தன் முதலான ஏழு பேர்கள் மீது குற்றம் சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஜே. எஸ். டயஸ் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு வந்தது.

விசாரணை முடிவில் நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்தார்.

எதிரிகள் சார்பில் திரு. ஏ. எல். கரவித்தா, புரக்டர் அ அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தார்.

## விக்ரமாவை கட்சியிலிருந்து விலக்க தீர்மானம்

கோட்டை, ஞாயிறு

லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டி திரு, ஐ. ஜே. விக்ரமாவை கட்சியில் இருந்து விலக்கிவிடத் தீர்மானித்துள்ளது.

டாக்டர் என். எம். பெரேராவின் வரவு செலவு திட்டத்தைக் குறை கூறியதற்காக கடந்தவாரம் லங்கா சமசமாஜக் கட்சியின் கீழுள்ள எழுது வினைஞர் சங்கத்தின் தலைவரான திரு. விக்ரம தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

# உதவிப் பணம் பெறும் ஏழைகள் பழைய நோட்டுகளை மாற்றினர்களாம்!

கோட்டை, திங்கள்

அரசாங்கத்திட மிருந்து உதவிப்பணம் பெறும் ஏழைகளின் பலர், வங்கிகளில் பழைய 50, 100 ரூபா நோட்டுகள் மாற்றியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விஷயமாக தற்பொழுது விசாரணை நடைபெற்றுவருகிறது. நாடெங்கிலும் வரலாக இது நடந்துள்ளதாக சமூக சேவை அமைச்சர் திரு. தென்னக்கூன் நேற்றுத் தெரிவித்தார்.

உதவிப் பணம் பெறும் ஏழைகள், வங்கிகளில் பணம் மாற்றிய விபரம், அவர்களுடைய கூப்பன் புத்தகத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

இவர்களின் சொந்தப் பணத்தை மாற்றினர்களா? அல்லது கமிஷனுக்கு, வேறு நபர்களின் பணத்தை மாற்றினர்களா? என்று விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

தருமப் பணம் பெறுபவர்களில் 6 பேர்கள் நேற்று யாழ்ப்பாணம் காரியாதிகாரி காரியாலயத்திற்கு சென்று தாங்கள் வங்கியில் பணம் மாற்றியதாக ஒத்துக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணித் துண்டுகள்

யாழ்ப்பாணம்-மானிப்பாய் ரேட், ஆறுகால் மடத்தடி, சின்னையா கடைக்கு முன்னாலிருக்கும் ஒழுங்கையிலுள்ள வீடுகட்டக்கூடிய ஒவ்வொன்றும் 4 பரப்புக்கொண்ட 4 காணித்துண்டுகள். டவுனிலிருந்து ஒரு மை அண்மையிலுள்ளது. நல்லதண்ணீர், மின்சார வசதி உடையது. விபரங்களுக்கு: 73, சிவன்கோவில் மேற்கு வீதி, வண்ணார் பண்ணை. 2400

### தேவை

காவலாளி

எங்கள் வைத்திய நிலையத்திற்கு இரவுக் காவலாளி ஒருவர் தேவை. வயது 45-55 வரை இம்மாதம் 15-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். சிறீ ஜோதி டிஸ்பென்சரி, K. K. S ரேட், தெல்லிப்பளை. 2399

பணம்

யாழ். நகரில் ஒரு வர்த்தகருக்கு மிக அவசரமாக ரூபா 6,000 தேவை. நியாயமான வட்டி மாதாந்தம் கொடுக்கப்படும். (15-11-70 க்கு முன்னராயின் பழைய நோட்டுகளும் ஏற்கப்படும்) குறைந்த தொகை உள்ளவர்களும் தொடர்புகொள்க. விளம்பர இல 2398, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2398

### விற்பனைக்கு

பிடவைக்கடைகளுக்குத் தேவையான அலுமாரிகள் (16) உடனடியாக விற்பனைக்குண்டு. 4 பக்கங்களும் கண்ணாடி 1/2'' பொருந்தியவை ஒவ்வொன்றும் 5 1/2' நீளமும் 2 1/2' அகலமும் உடையவை. 85, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 360. மற்றும் விபரங்கட்கு: மனேஜர், ரீகல் சினிமாவுடன் தொடர்புகொள்க. 2501

## ரஷ்யா சென்று திரும்பினர்

உடுப்பிட்டி, ஞாயிறு

சோவியத்சார்பு கம்யூனிஸ்ட்கட்சியின் கீழியங்கும் ஐக்கியதோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. தா. சுப்பிரமணியம் அண்மையில் ரஷ்யா சென்று திரும்பியுள்ளார். இவர் அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

## உடைந்துவிழும் நிலையில்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவுக்கு வருகை தரும் மக்களை வரவேற்கும் வாசகங்களைக்கொண்டதும், ஊரதீவுத் துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருப்பதுமான அறிவிப்புத்தூண்கள் உடைந்துவிழும் நிலையிலிருக்கிறது. யார் தலையில்விழுமோ எனப் பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த
செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்— லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த
மாட்டுக்கார வேலன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்

### மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# "சில கூட்டங்களில் உள்ளூர் அரசியல் பேசுவதுண்டு"

யாழ்ப்பாணம், திங்கள்

''யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை தொகுதிகள் தோறும் தினமும் மூன்று நான்கு கூட்டங்கள் நடக்கும். சில சமயம் 5 கூட்டங்களும் ஒரேதினத்தில் நடைபெறுவதுண்டு. வடக்கிலுள்ள 13தொகுதிகளிலும் சுமார் 100 முதல் 125 கூட்டங்களில் பேசினேன்.''

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் சாட்சியமளித்த தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் குறுக்கு விசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணத் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன்ற் தர்மோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது.

மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் மொகமட், சாட்சியமளித்த அமிர்தலிங்கத்தைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: நியமனம் முதல் தேர்தல் வரை ஒருமாத காலம் இருந்தது?- ஆம்.

வழ: சுறுசுறுப்பான மனிதராக இருந்தீர்?- ஆம்.

வழ: நீண்ட நேரம் கூட்டங்களில் பேசுவீர்?- அது கூட்டம் நடக்கும் இடத்தைப் பொறுத்தது. ஏற்கனவே கூட்டம் நடந்த இடமாக இருந்தால் சுருக்கமாகப் பேசுவேன். கூட்டம் வைப்பது அப்பகுதியில் முதல் தடவையாக இருந்தால் கட்சியின் முழுத் திட்டங்கள், கொள்கைகளை விளக்கிக் கூறுவேன்.

வழ: சில கூட்டங்களில் உள்ளூர் அரசியலும் பேசப்படுவதுண்டு? ஆம்.

வழ: முருங்கன் கூட்டத்தில் எத்தனை பேச்சாளர்கள் இருந்தனர்?- 10 அல்லது 11 பேர்.

வழ: சரியான கூட்டம் இருந்ததா?- ஆம்.

வழ: முஸ்லீம்கள் கூடுதலான தொகையினராக இருந்தனர்?- ஆம்.

வழ: தமிழர் பெரும்பான்மையினராக இருந்தனர்? - ஆம்.

வழ: அவர்களைத் தமிழ் பேசும் மக்களெனக் கருதுவீர்கள் - ஆம்

வழ: கடந்த தேர்தலில் செல்வநாயகம் இதே கொள்கையில் போட்டியிட்டார்?- ஆம்.

வழ: வைத்திலிங்கத்தை முன்பு தெரியும்?- நீண்ட நாட்களாகத் தெரியும்

வழ: எவ்வளவு காலமாக -1950ம் ஆண்டு மன்னார்த் தொகுதியில் தமிழரசு நிறுவப்பட்டபோது அவர் கமிட்டியில் இருந்தார்.

வழ: வைத்திலிங்கத்தை முருங்கன் கூட்டத்தில் பார்த்தீர்?- அடம்பன் கூட்டத்திலும் பார்த்தேன்.

வழ: எத்தனை மணிக்கு வைத்திலிங்கம் கூட்டத்தில் பேசினார்?- 9 மணிக்கு.

வழ: அப்பொழுது எத்தனை பேர் பேசிவிட்டனர்?- 8 அல்லது 9 பேர்.

வழ: இவர் 10-வது பேச்சாளர்?- 9 அல்லது 10வது பேச்சாளர்.

வழ: கூட்டம் ஆரம்பத்திலிருந்து இருந்தீர்?- தலைவர் பேச்சுக்கும் முதல் பேச்சாளர் பேச்சுக்கும் இருக்கவில்லை.

வழ: கூட்டத்திற்கு தலைவர் யார்?- திருச்செல்வம்

வழ: அது முக்கியமான கூட்டம்?- முதலாவது பிரசாரக் கூட்டம்.

வழ: முருங்கனுக்கும் மன்னாருக்கும் எவ்வளவு தூரம்?- 10 மைல்.

வழ: முருங்கன் ஜனத்தொகையுள்ள இடமா?- மன்னாரிலுள்ள முக்கியமான விவசாயப்பகுதி.

வழ: அது ஒரு பட்டினமா?- கிராமம்.

வழ: கூட்டம் ஆரம்பம் முதல் உம்மை எதிர்பார்த்திருந்தனர்?- ஆம்.

வழ: கூட்டத்திற்கு சென்றதும் மாலைகள் சூட்டினார்கள்?- ஆம்.

வழ: மாலைகளை என்ன செய்வீர்?- அங்கேயே விட்டுச் செல்வேன்.

வழ: பேச்சாளர்கள் வந்...ல் மேடைக்கு அழைத்த...

வழ: எல்லா உள்ளூர் அரசியல் பேச்சுகளையும் ஞாபகத்தில் வைத்திருப்பீரா?- முக்கியமானதாக இருந்தால் வைத்திருப்பேன்.

வழ: வேறு எந்ததொகுதியினதும் உள்ளூர் அரசியல் பேச்சை ஞாபகத்தில் வைத்திருக்கிறீரா?- பருத்தித்துறை, நல்லூர் தொகுதிகள்பற்றியும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன்.

வழ: நீர் தியாகராசாவிற்கு எதிராக மனு ஒன்றை தாக்கல் செய்தீர்?- நான் தாக்கல் செய்யவில்லை, வேறு ஒருவர் தாக்கல் செய்தார்.

வழ: தியாகராசா எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?- தமிழ்க்காங்கிரஸ்.

வழ: நீர் 15 வருட அனுபவமுள்ள பிரபலமான அப்புக்காத்து?- 18 வருட அனுபவம்.

வழ: திருச்செல்வம் உம்மை எப்படி அழைப்பார்?- 'தம்பி' என்று.

வழ: அழகக்கோன் தேர்தல் ஆட்சேப மனுபற்றி கூறவில்லையா?- இல்லை

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர்-விஜயகுமாரி நடித்த

## பஸ்சேவை விஸ்தரிப்பு

அம்பன், ஞாயிறு

பருத்தித்துறை- தாளையடி- கொடுக்கிளாய் பஸ்சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ் தொண்டமனாற்றை அடைந்து அங்கிருந்து திரும்ப பருத்தித்துறையை அடைந்து பின்னர் தாளையடி ஊடாக கொடுக்கிளாயை அடைந்து ஆழியவளை எல்லையை அடையும். ஆழியவளையிலிருந்து புறப்படும் பஸ் பருத்தித்துறையை அடைந்து அங்கிருந்து நேரடியாக தொண்டமனாற்றை அடையும் கிளிநொச்சி- யாழ்ப்பாணம் பஸ் சேவை இதுவரை காலமும் கொடுக்கிளாய் சந்திவரையிலேயே நடைபெற்று வந்தது. இந்த பஸ்சேவை ஆழியவளை எல்லைவரையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டம்

முசலி, ஞாயிறு

யாழ்ப்பாணம்-சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வங்காலை புனித ஆனாள் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடந்த சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி நடந்தது இரு பிரிவுகளும் இதில் கலந்துகொண்டன.

2-ம் பிரிவு ஆட்டத்தில் இரண்டுகோஷ்டிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டு ஆட்டத்தைச் சரிசமனாக முடித்துக்கொண்டது.

1-ம் பிரிவு ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் வீரர்கள், வங்காலை புனித ஆனாள் கோஷ்டியை மூன்று கோல்களால் தோற்கடித்தனர் வங்காலை புனித ஆனாள் கோஷ்டியினர் ஒருகோல்களும்போடவில்லை.

இந்தவிளையாட்டுக்குமத்தியஸ்தராக மன்னார்காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எம். ஜீவரெத்தினம் மத்தியஸ்தராககடமையாற்றினார்.

இவ்விளையாட்டுக்கு தள்ளாடி இராணுவ அதிகாரி பிரதம விருந்தினராக சமுகமளித்தார்.

### அகில இலங்கை

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி 12-ல் ஆரம்பம்

கிளிநொச்சி, ஞாயிறு

அகில இலங்கை உதைபந்தாட்டக் கழகத்தாரின் போட்டிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 12ம் திகதி கொழும்பில் ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டத்திற்கான போட்டியில் இலங்கையிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்ற விருப்பதாக இலங்கைஉதைபந்தாட்டக்கழகச் செயலாளர் திரு. வி. கே. ஆறுமுகம் கூறினார்.

இம்மாதம் 12-ம் திகதி கேம்பிறிட்ஜ் விளையாட்டுக் கழகமும், லக்கி ஸ்ராஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. அன்றைய தினம் இரத்மலானை புகையிரதப்பகுதியினருடன் திறீஸ்ராஸ் கழகத்தினர் விளையாடுவர்.

இதேநாளில் இலங்கைக் கடற்படையினருடன், மன்சிஸ்ரர் விளையாட்டுக் கழகத்தினர் மோதுவர்.

குறிப்பிட்ட திகதியில் கட்...

### திரைப்படவிமர்சனம்

## மாட்டுக்காரவேலன்

'மாட்டுக்கார வேலன்' நம் நாட்டுக்குவந்து நீண்டநாளாகிவிட்டன. ஆனாலும் அவனது அபிமானிகள் வாசல் தினமும் திரண்டு நிற்பதால் இடிபட்டுநெரிபட்டு அவனைப்பார்க்க எனக்கு முடியாமல் போய்விட்டது. சில தினங்களுக்கு முன் அவனிடமிருந்தே எனக்கு அழைப்பு வந்தது. போய்ப்பார்த்தேன்.

மாட்டுக்காரவேலனிக்கும் ஜூனியர் வக்கீல் ரகுவுக்கும் வித்தியாசம்காண்பது ஜெயலலிதாவுக்கும் லட்சுமிக்கும் மட்டுமல்ல எனக்கும் கூட சிலசமயங்களில் சங்கடமாகத் தானிருந்தது.

ஆமாம் இரட்டை வேடத்தில் எம். ஜி. ஆர். நடிக்கிறார். மாடுக்கார வேலனாகவும் ஜூனியர் வக்கீல் ரகுவாகவும் வரும் எம். ஜி. ஆர். சிறப்பாக நடித்திருக்கிறார். மாட்டுக்காரவேலன், எம். ஜி. ஆருக்கு ஜோடியாக ஜெயலலிதாவும் ஜூனியர்வக்கீல் எம். ஜி. ஆருக்கு ஜோடியாகலட்சுமியும் ஈடுகொடுத்து நடித்திருக்கின்றனர். வர்ணப்படம் நந்தவனம், பங்களாக் காட்சிகளில் காதல்ஜோடிகள் ஆடிப்பாடி, புரண்டு விழுந்து நடிப்பது கண்ணுக்குக்குளிர்ச்சி எம் ஜி ஆர். என்றால் சண்டையில்லாமலா? நிறையஇருக்கிறதுபடத்தின் கடைசிக் காட்சிகளை ஆசனத்தின் நுனியிலிருந்து பார்க்கச் செய்கிறது. அசோகன் வில்லன்; சொல்லவேண்டுமா? சோவின் நகைச்சுவை முதல்தரம்; சோவுக்கு ஜோடி சச்சு, பரவாயில்லை, கண்ணியமான வக்கீல் சட்டநாதனாக வி. கே. இராமசாமியும் அவர் மனைவியாக எஸ். வரலட்சுமியும் கண்ணியமாக நடிக்கின்றனர்.

கதையைச் சொல்லிவிட்டால் படம் சுவைகெட்டுவிடுமென்பதால் சொல்லாமல்விடுகிறேன்.

எம். ஜி. ஆரின் காதல் நடிப்பு, சண்டை இத்தனையும் இருக்கும்போது கதையைப்பற்றி என்ன கவலை?

ப. நீலகண்டனின் டைரக்ஷனும் படப்பிடிபும்; காட்சி அமைப்புக்களும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. நல்ல பாடல்களும் காதுக்கு இனிமைதருகின்றன.

இதுவரை நீங்கள் பார்க்காவிட்டால் யாழ்ப்பாணம் 'ராணி' தியேட்டருக்குப் போய் மாட்டுக்கார வேலனை ஒரு தடவை பார்த்துவிடுங்கள்.

-'திரைவண்டு'

## பனங்காமம் இராமசபை தேர்தல் முடிவுகள்

முசலி, ஞாயிறு

பனங்காமம் கிராமசபைத் தேர்தலில் பழைய தலைவர் திரு. ஆரியர் தம்பையா வெற்றிபெற்றுள்ளார். மூன்றும் வட்டாரம் தவிர்ந்த ஒன்பது வட்டாரங்களுக்கும் தேர்தல் நடந்தது. மூன்றும் வட்டாரத்தில் வாக்காளர் இல்லாததால் ஒருவரும் போட்டியிடவில்லை.

தேர்தல் முடிவுகள் வருமாறு:

1-ம் வட்டாரம் கணபதிப்பிள்ளை சண்முகநாதன், 2-ம் வட்டாரம் தம்பிப்பிள்ளை நாகமுத்து, 3-ம் வட்டாரம் வாக்காளரில்லை, 4-ம் வட்டாரம் ஞானசேகரம்பிள்ளை குமாரசாமி, 5-ம் வட்டாரம் ஞானசேகரம்பிள்ளை இராசநாயகம், 6-ம் வட்டாரம் பெரியதம்பி இரத்தினசிங்கம், 7-ம்வட்டாரம் சூரியர் தம்பையா, 8-ம் வட்டாரம் சின்னத்தம்பி பொன்னுசாமி, 9-ம்வட்டா...

## மூடப்பட்டது

மன்னார், ஞாயிறு

மன்னாரில் கடந்த மாதம் திரு எம் துரைராசாவினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட சுதந்திரக்கட்சிக்கிளை மூடப்பட்டுவிட்டதாகஉத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் ஏற்கனவே 12 சுதந்திரக்கட்சிக்கிளைகள்நிறுவப்பட்டுள்ளதாகவும் மேலும்பல கிளைகள் நிறுவ தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் இங்கு வரவிருப்பதாகவும் மன்னார் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் ஜனாப் என். எஸ் கேகாதர் தெரிவித்துள்ளார்.

## நன்கொடை

ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவிலுள்ள சுடுகாடு, இடுகாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கென...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொழும்பு) (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

---

## ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
நடித்த
## பவானி

---

## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
## உத்தம புத்திரன்
(புதிய கொப்பி)

---

REGAL
Jaffna
Daily 4-45, 7 &9-45
Eric Morecambe
in
WHAT HAPPENED AT
CAMPO GRANDE
(color)

---

MANOHARA
Jaffna
Daily4-45, 7 &9-45 p m
Poya days 10-30 a. m.
Cornel Wilde
in
BEACH RED
(Color by Delux)

---

இப்பொழுது திரையிடப்படுகிறது
# யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன்
★ சரோஜாதேவி
சுந்தரராஜன் - சோ - மனோரமா
நடித்த
# ஐந்து லட்சம்

---

...கள்?- ஆம்.

வழ: மாலைகளை என்ன செய்வீர்?- அங்கேயே விட்டுச் செல்வேன்.

வழ: பேச்சாளர்கள் வந்தால் மேடைக்கு அழைத்து வருவார்கள்?- ஆம்.

வழ: கூடிய தொகை கேட்ட ஒருவருக்கு ரெண்டர் கொடுக்கவில்லையென்று மன்னார் பட்டினசபை தலைவருக்கு எதிராகப் புகார் இருந்தது?- ஆம்.

வழ:- உள்ளூராட்சி மன்றங்கள் ரெண்டர் வழங்கும் விஷயம்பற்றி அடிக்கடி பத்திரிகைகளில் வருவதுண்டு?- ஆம்.

வழ: வைத்திலிங்கம் கூட்டத்தில் கூறியவற்றை ஞாபகத்திலிருந்து கூறுகிறீர்?- ஆம்.

வழ: இவ்விஷயம் பற்றி எப்பொழுது அறிந்தீர்?- தேர்தல் முடிந்தபின்னர் திருச்செல்வம் வீட்டில் அழகக்கோனைச் சந்தித்தேன். முருங்கன் கூட்டம் பற்றி அவர் தெரிவித்தார்.

வழ: வைத்திலிங்கத்தை தவிர வேறு யாராவது உள்ளூர் அரசியல் கதைத்தார்களா?- ஜோன்மார்க் கதைத்தார்.

வழ: முருங்கன் கூட்டத்தில் உள்ளூர் அரசியல்பேசப்பட்டது?- ஆம்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 9—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 சித்திரம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா

இரவு 6-10 பொலிஸ்நிகழ்ச்சி 6-15 வயலின், 6-30 விவசாயநிகழ்ச்சி, 6-45 கண்ணகி காவியம், 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு

---

யிலேயே நடைபெற்று வந்தது. இந்த பஸ்சேவை ஆழியவளை எல்லைவரையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

---

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 23-ந் திகதி

(9-11-70)

மேஷம்- குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும். வெளியிடத்தில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம்.

ரிஷபம்- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு.

மிதுனம்- பொருளாதாரத் துறையில் விருத்தி ஏற்படும் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும். புதிய முதலீடுகள் வெற்றியைத் தரும்.

கடகம்- வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும். எண்ணம்போல் யாவும் நடக்கும்.

சிம்மம்- எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவி செய்யப்போய் குறை கேட்க நேரிடலாம்.

கன்னி- வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல் சிட்டுக்களுக்கு கனிவான தினம் கணவன் மனைவி உறவு அன்புகொண்டதாக இருக்கும்.

துலாம்- நண்பர்களின் நச்சரிப்பு மனக்குமைச்சலை ஏற்படுத்தும், கடமையாற்றுமிடத்தில் கழுகுப்பார்வை வட்டமிடும்.

விருட்சிகம்- ஒளிமயமான நாள். ஆலயவழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்களை உற்சாகத்தில் பெற்றோர் துணை நிற்பர்

தனுசு- செய்தொழிலால் சிறப்படைவதற்கு இடமுண்டு. புதிய கண்டுபிடிப்புக்களும் இடம்பெறும்.

மகரம்- பணம் தேடும் படலத்தில் வெற்றிக்கு இடமுண்டு. பாவையர்கள் சிநேகிதமும் கிடைக்கலாம்.

கும்பம்- வாழ்க்கையே ஒரு புதிராகத் தோன்றும். செலவினங்கள் உச்சக்கட்டத்தை அடையும்.

மீனம்- ஏமாற்றத்தின்தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். பொறுமை நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

யாடுவர்.

இதேநாளில் இலங்கைக் கடற்படையினருடன், மன்சிஸ்ரர் விளையாட்டுக் கழகத்தினர் மோதுவர்.

குறிப்பிட்ட திகதியில் கட்டுநாயக்கா விமானப்படையினரும், ஒலிம்பிக்விளையாட்டுக் கழகமும் மோதும்.

---

ரம் ... இராசநாயகம், 6-ம் வட்டாரம் பெரியதம்பி இரத்தினசிங்கம், 7-ம்வட்டாரம் சூரியர் தம்பையா, 8-ம் வட்டாரம் சின்னத்தம்பி பொன்னுசாமி, 9-ம்வட்டாரம் சின்னப்பொடி கந்தையா.

---

## நன்கொடை


ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவிலுள்ள சுடுகாடு, இடுகாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கென அரசினர் கிராம சபைக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் நன்கொடை அளித்துள்ளனர்.

---


# புதிய பரத்தயன் ஈ50

## பாவித்து காய்கறி,புகையிலைப் பயிர்களைக் காப்பாற்றுங்கள்!



காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் அழுக்கணவன், பனிப்பூச்சி, இலையரிப்புழு, வெண் ஈ, பேன், ஒட்டு உண்ணி, சிற்றுண்ணி, இலையுருட்டிப்புழு, தத்துவெட்டி முதலாம் எல்லாப் பீடைகளையும் கொல்ல வல்ல சர்வபூச்சி நாசினி பரத்தயன் ஈ 50.

புகையிலையையும் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரி, தக்காளி மற்றும் மரக்கறிப் பயிர்களையும் பாதிக்கும் சகல வித பூச்சி புழுக்களையும் சிக்கனமாக ஒழித்துக்கட்ட மிக்க வன்மையான நாசினி பரத்தயன் ஈ 50.

வைக்க, எடுக்க, வயலுக்குக் கொண்டு போக வசதியான அலுமினியம் போத்தல் கிடைக்கும். விலை மிகச் சகாயம்:-

100 சீ.சீ. - ரூ. 4/-
250 சீ.சீ. - ரூ. 9/-
1000 சீ சீ - ரூ. 31/-

சகாய விலையில் கூடிய பயனளிப்பது பரத்தயன்...

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பரத்தயன் ஈ 50

மூலப் பொருட்கள் உற்பத்தியாளர்கள்: பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர் ஹேக்கெம் லிமிட்டெட் 400, யூனியன் வீதி, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதாஜி இந்தியாவில் வாழ்கிருர்

## கொஸ்லால் கமிஷன் முன் தகவல்

கல்கத்தா, நவ. 8

விமானவிபத்தில் நேதார்ஜி இறக்கவில்லை. நேதார்ஜி இறந்தார் என்று சொல்வது ஜப்பான் அரசாங்கத்தின் கேலியான செய்கையாகும்' என்று சுபாஸ் சந்திரபோசின் மூத்த சகோதரரான 80 வயதுடைய சுரேஸ் சந்திரபோஸ், நேதாஜியின் மறைவுகுறித்து விசாரணை செய்துவரும் கொஸ்லாவிசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

திரு. போஸ் ஷா நவாஸ் கமிட்டி உறுப்பினராகும். அவர் தன் சாட்சியத்தில், நேதாஜி எதிர்பார்த்த வெற்றி இரண்டாவது மகா யுத்தத்தில் இழந்து வருவதைக் கண்டு 1944-ம் ஆண்டு தெரிவித்தார். இந்த விடயத்தில் தனக்கு அரசியல் தஞ்சம்கிடைக்கக்கூடிய ரஷ்யாவிற்கு அவர் போகவிரும்பிஞர் என்றுகூறிஞர்.

யுத்தவெற்றியின்பின் ஆங்கிலோ அமெரிக்கர்கள் ஜப்பானியஅரசாங்கத்தையுத்தகாலகுற்றவாளியாக் கருதி நேதாஜியை தங்களிடங் ஒப்படைக்குமாறு பெற முயல்வார்கள் என்பதிஞலேயே, ஜப்பானுக்குத்திரும்பும் வழியில்அவர் பிரயாணம்செய்த விமானம் போர்மோசாவில் விபத்துக்கிள்ளானது என்று கூறியிருக்கலாம். மேற்கூறப்பட்ட விமான விபத்தின் 5 நாட்களின் பின்பே தைகொகுவில் இறந்துவிட்டதாகச் செய்தி வெளியிடப்பட்டது

நவாஸ் கமிட்டி குறிப்பிட்ட விமான விபத்து நடந்த இடத்திற்குச் செல்லவில்லை. தைகொகுவிற்குநாங்கள் செல்வதை அனுமதியாததற்கு உண்மையான காரணம் என்னவென்ருல், அந்த இடத்தில் விமா விபத்து நடக்கவுமில்லை. அதஞல் நேதாஜி இறக்கவுமில்லை என்பதுதான் கேர்ணல் ஹபிப்புக் ரஹ்மான் இங்கு சமர்ப்பித்த இரண்டு புகைப்படங்களும் ஒரே இடத்தை சுட்டுவதல்ல. அந்தப்படங்களிலுள்ள இடம் மலைப் பிரதேசமேயன்றிசமதரைப்பிரதேசமல்ல.

திரு. ஷா நவாஸ் குழுவின் முழு நோக்கமும் நேருஜியின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதே. விமான விபத்தில் நேதாஜி இறந்துவிட்டார் என நிறுவிஞல் தனக்கு வங்காள கவர்னர்பதவி தருவதாக உறுதி கூறப்பட்டதாக திரு ஷா என்னிடம் கூறிஞர்.

இதன்படி திரு ஷாநவாஸ் உதவி ரெயில்வே மந்திரியாகவும், இன்னெருு அங்கத்தவரான திரு. எஸ் என் மித்ரா தூதுவராகவும் நியமிக்கப்பட்டனர்

1945-ம் ஆண்டு நேதாஜியின் மரணம்பற்றி ஆராயச் சென்ற பாங்கொக் தூதுக்குழுவுடன் சென்ற துப்பறியும் பிரிவைச்சேர்ந்த முன்னுன் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கே பி டீ. கல்கத்தாப் பொலிஸ் பாதுகாப்புகட்டுப்பாட்டு அதிகாரியும், சிங்கப்பூரில் ஜப்பானிய யுத்தக் கைதிகள் பாதுகாவலராய் இருந்த முன்னுன் இராணுவ அதிகாரியுமான திரு. ஜி. சி. சன்யால் ஆகியோரும் சாட்சியம் அளித்தனர்.

திரு. டீ. தனது சாட்சியத்தில் கூறியதாவது:- குறிப்பிட்ட விமானவிபத்து நடந்ததாகச் சொல்லப்படும். தைபோக்குநா ன்செல்லவில்லை. என்னை அங்குசெல்ல அமெரிக்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. பாங்கொக்கில் இருந்த இரண்டு மாதங்களில் அங்கு பல சாட்சியங்களையும் தஸ்தாவேஜுக்களையும் பதிவு செய்தோம். 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 17-ந் திகதி நேதாஜியைஏற்றிச்சென்ற விமானமும்விலை மதிப்புள்ள ரத்தினங்களும் வைரங்களும் விடப்பட்டிருந்தன.

அமெரிக்க பிரிட்டிஷ் குழுக்...

### குவபெக் தொழிலமைச்சரை

## கடத்திக் கொலை செய்த நால்வர் கைது

ஒட்டாவா, நவ 8

குவபெக் தொழிலமைச்சர் லெபட்டோவைக் கடத்திக் கொலை செய்தார்கள் என்று 19 வயதுடைய இளம் மாணவரையும் மேலும் மூவரையும் குவபெக் பொலிசார் கைது செய்து கோட்டில் ஆஜர் செய்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் பிரிட்டிஷ் ராஜதந்திரி ஜேம்ஸ் குரோசையும் குவபெக் தொழிலமைச்சரையும் குவபெக் தேசிய விடுதலை வாதிகள் கடத்தி அவர்களால் விடப்பட்ட கோரிக்கை கிடைக்காததிஞல் குவபெக் தொழிலமைச்சரைக் கொலைசெய்து ஒரு விமான நிலையத்துக்கருகே போட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக கனடா சமஷ்டிக் குடியரசுப் படைகளும், குவபெக் பொலிசாரும் தீவிரவேட்டை நடத்திப் பலரைக் கைதுசெய்தனர்.

இப்பொழுது குவபெக் தொழிலமைச்சரைக் கடத்திக் கொலை செய்தார்கள் என்றதன்பேரில் நால்வர் கைதுசெய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டனர் 19 வயதுடைய லொடி என்னும் மாணவர் ஒருவரும் இரு சகோதரர்களும் இன்னுமொருவருமே இந்நால்வருமாவர்.

### அறிவாற்றலை வளர்க்க

## அமெரிக்க கல்வி முறையை பின்பற்ற வேண்டும்

— இரா. நெடுஞ்செழியன்

சென்னை, நவ 8

'அமெரிக்காவைப் பொறுத்தவரை மூன்றில் ஒரு பகுதியினர்தான் பல்கலைக்கழகப்பட்டப் படிப்பு படிக்கின்றனர். மற்றவர்கள் உயர் கல்விமுடிந்தவுடன்தொழில் துறைக் கல்வி பயில்கின்ற

அவர் மேலும் கூறியதாவது: அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்கள் தங்கள் விருப்பத்திற்குஏந்தபடி மாணவர்களை உருவாக்க பாடத்திட்டங்களை வகுக்கும் உரிமை பெற்றுள்ளது என்றும் அதஞல்

## கால் நடை ஆராய்ச்சிக்கு அமெரிக்கா உதவி

அம்பன், ஞாயிறு

கால் நடைகளின் கால், வாய் நோய்கள் பற்றியும் நில அட்டை பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு அமெரிக்கஅரசாங்க விவசாய இலாகா இரண்டு மானியங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. பேராதனையில் உள்ள கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞானிகள் கால், வாய், நோய்பற்றி மூன்ருண்டு கால ஆராய்ச்சியை மேற் கொள்வதுடன் இதனை கட்டுநபடுத்தக்கூடிய தடுப்பு ஊசி மருந்துகளை உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து அறிவார் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள மானியத்தைக் கொண்டுஇலங்கை விஞ்ஞானிகள் வெளிப்புற ஆராய்ச்சியை மேற்கொள்வர். அத்துடன் நில அட்டையின் பெருக்கத்தை எந்த முறையில் கட்டுப்படுத்தலாம் என்பது பற்றியும் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தில் மிருக வைத்தியர்கள் ஆராய்ச்சியை மேற்கொள்வர்.

## வேலை தெரியாதவருக்கு வேலை!

பெங்களூர், நவ. 8

தட்டெழுத்தோ சுருக்கெழுத்தோ தெரியாத ஒருவர் மைசூரில் ஒரு அதிகாரியின் தயவிஞல் தற்காலிக ஸ்டெனே கிராபர் வேலை பெற்றுள்ளார்.

அவர் என்ன வேலை செய்துகொண்டிருந்தார் எனக் கேட்டதற்கு சம்பளம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாரென்று ஓர் அதிகாரி பதிலளித்தார்

ஆட்குறைப்பு செய்யப்பட்ட தற்காலிக வேலைக்காரர்களுக்கு மாற்ற வேலை தருவதற்கான பரி[illegible]னைகள் நடந்த போ[illegible] இந்த விசித்திர நியமனம் அம்பலத்துக்கு வந்தது.

## பெர்லினில்ரஷ்யர்

## கென்னடி போட்டியிடார்

வாஷிங்டன் நவ 7

அண்மையில் நடைபெற்ற அமெரிக்க தேர்தலில்செனட் சபைக்கு திரு. எட்வேர்ட் கென்னடி தெரிவுசெய்யப்பட்டார். தேர்தல் முடிவு தெரிந்ததும், தான் ஜனதிபதி பதவிக்கு நிற்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## குருஷ்சேவுக்கு இருதயநோய்

மாஸ்கோ. நவ 8

சோவியத் யூனியனின் முன்னுள் பிரதமர் திரு. குருஷ்சேவ் இரண்டாவது முறையாக இருதயநோயால் தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குருஷ்சேவுக்கு இப்பொழுது 76 வயதாகிறது. கடந்த யூன் மாதம் இருதய நோயால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்ட திரு குருஷ்சேவ் டாக்டர்களின் ஆலோசனையையும் கேளாமல் ஒரு மாதத்திற்கு முன்பு வைத்தியசாலையை விட்டு வெளியேறிஞர்.

## கடல்நீரின் உப்புந்தன்மையை நீக்க புதியவழி

லண்டன், நவ. 8

கடல்தண்ணீர் மற்றும் கடுக்கும் தண்ணீரிலிருந்து உப்பையும் பிறஅசுத்தங்களையும் நீக்கி அந்தத் தண்ணீரை சுத்தமான தண்ணீராகமாற்ற 'உறயவைக்கும்' முறையொன்றை பிரிட்டிஷ் அணுசக்தி கமிஷன் கண்டுபிடித்துள்ளது. வர்த்தக ரீதியில் சாத்தியமானதாகவும், சிக்கனமாகவும் இந்தமுறை இருக்குமென்று கருதப்படுகிறது

இந்தமுறை எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பது பற்றியும் இதன் பிற அம்சங்கள் குறித்தும் [illegible] ஆண்டு ஆராய்ச்சி மேற்கொண்டிருக்கிறது பிரிட்டிஷ் அணுசக்தி கமிஷன் [illegible] முடியும் தறுவா[illegible] இப்போதுள்ளது இது குறித்து கமிஷன் ஒரு [illegible]

## ரயில் விபத்து

ரங்கூன், நவ. 8

ரங்கூனிலிருந்து சுமார் 80 மைல் தொலைவிலுள்ள வா என்ற இடத்தில் ஒரு ரயில் கேட்டில் ஒரு பஸ்ஸும் பாஸஞ்சர் ரயிலும் மோதிக் கொண்டதில் 12 பேர் மாண்டனர். மற்றும் 20 பேர் காயம் அடைந்தனர்.

## 'நாவலரை தேசிய வீரர் வரிசையில் வைக்குக'

ஊரதீவு, ஞாயிறு

'இலங்கையில் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகள் அரசுபுரிந்த நேரத்தில், இலங்கை வாழ் மக்களை மதம் மாற்றும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டார்கள். இச் சூருவளிக்குள் அகப்பட்ட சைவத்தமிழ் பெருங்குடி மக்களை, அற்ப சலுகைகளுக்கு மயங்கவிடாது தடுத்து சைவத்தையும் தமிழையும் ஒழுங்கே காப்பாற்றிய பெருமை நல்லைநகர் நாவலர் பெருமானுக்கே உரியதாகும். பெருமை அவரையே சாடும், எனவே அப்பெரு மகனுரைக் கெளரவிக்க வேணடியது அவரது தியாகத்தின்பேரால் சைவர்களாக வாழும் எமதுகடமையாகும். எனவே அப் பெருந்தகையைத் தேசிய வீரர் வரிசையில் சேர்க்குமாறு வேண்டுகிருேம்'.

இவ்வாறு அரசினரைக் கோருவதென ஊரதீவு இளந்தமிழர் மன்றப் பொதுச்சபை தீர்மானித்துள்ளது. மன்றக் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தின்போது, மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவுவிழாவை ஏற்பாடு செய்வதற்கு, மன்றப் பொருளாளர் திரு கா. கந்தசாமி தலைமையிலான விழாக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மலர் ஒன்று வெளியிட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

துணுக்காய் பஸ்ஸில் ஒரு கூப்பனும் சேட்டும் கன்ஞதிட்டியைச் சேர்ந்த ச. நேதாஜி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் வந்துபெற்றுக் கொள்ளவும்,

## கந்தர் அனுபூதி

உடுப்பிட்டி, ஞாயிறு

"உலகில் எமக்குப் புகழ் [illegible]

## ஐ.நா. வில் சீஞ சேருவதில் ரஷ்யாவுக்கு விருப்பமில்லை?

### பால்டிமோர்ஸன் பத்திரிகை தகவல்

நியுயோர்க், நவ 8

ஐ. நா. சபையில் கம்யூனிஸ்ட் சீஞவைஇடம்பெருமல் செய்வதில் அமெரிக்காவுடன் சோவியத்யூனியனும் உடன்பாட்டுக்கு வந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

சீஞவை ஐ. நா. சபையில் சேர்த்துக்கொள்வதை அமெரிக்கா எதிர்த்து வருவது தெரிந்ததே. ஆஞல் பொதுவுடமை நாடென்ற முறையில் வெளிப்படையாக சீஞவை சோவியத்யூனியன் ஆதரித்துவருகிறது. அண்மைக்காலமாக சீஞவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்பட்ட தகராறுகளே ஐ. நா. சபையில் சீஞவைச் சேர்த்துக்கொள்வதை சோவியத் மறைமுகமாக எதிர்ப்பதற்குக் காரணமாக இருக்கலாமென அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

ஐ. நா. சபையில் சீஞ சேர்வதை எதிர்ப்பதில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கூட்டுச்சேர்ந்துள்ளதாக 'பால்டிமோர்சன் பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது'

கம்யூனிஸ்ட்சீஞ, கோமின்டாங் சீஞ, இரண்டுக்கும் ஐ நா.வில் பிரதி நிதித்துவம் இருக்கச்செய்யும் பெல்ஜியத்தின் சமரசப் பிரேரணை பொதுச்சபையில் வராமல் போனதற்கும் சோவியத் நிர்ப்பந்தம்தான் காரணம் என்று அப்பத்திரிகை மேலும் கூறுகிறது.

பெல்ஜிய சமரச திட்டத்தின்படி ஐ நா சபையின் சகல பிரிவிலும் கம்யூனிஸ்ட் சீஞ இடம் பெறுவதோடு பாதுகாபஸ்து சபையிலும் நிரந்தர இடம் பெறும் கோமின்டாங் சீஞவுக்கு ஐ. நா பொதுச் சபையிலும், தேர்தல் மூலம் அங்கத்தவராகக்கூடிய மற்ற ஸ்தாபனங்களிலும் இடம் இருக்கும். கம்யூனிஸ்ட் சீஞவுக்கு ராஜதந்திர அங்கீகாரம் அளிக்கும் விடயத்தில் மெதுவாக நடந்து கொள்ளும்படி இத்தாலிக்கு சோவியத் யோசனை கூறியதாம்.

## அரசியல் தலையீட்டுக்கு ஆசிரிய சங்கம் கண்டனம்

காலி, வெள்ளி

வடபகுதியிலுள்ள தமிழ் மாணவர்களின் உயர் கல்வியில் யாழ்ப்பாணப் பகுதி தமிழாசிரியர்கள் காட்டும் ஆர்வத்தை ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க காரியதரிசி திரு எல். ஆரியவன்சா வெகுவாகப் புகழ்ந்து பாராட்டிஞர்.

ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கத்தின் காலிக் கிளைக் கூட்டத்தில் அவர் பேசுகையிலேயே யாழ்ப்பாணப் பகுதி தமிழ் ஆசிரியர்களைப் புகழ்ந்தார்.

'உலகத்தில்பாடசாலைகளில் ஆசிரியர்கள் குறைந்த மணி நேரம் உழைக்கும் ஒரே ஒரு நாடு இலங்கைதான். ஆஞல் வட பகுதி ஆசிரியர்கள் 5 மணி நேரத்துக்குக் கூடுதலாகக் கடமையாற்றுகிருர்கள். விசேஷமாக விஞ்ஞான வகுப்புகளில் இப்படியான அக்கறை காட்டுகிருர்கள். இதஞல் கூடுதலான தமிழ் மாணவர்கள்பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று சிங்கள மாணவர்களை வெற்றி பெற்றுவிடுகிருர்கள்' என்று திரு. ஆரியவன்ஸா இங்கு பேசுகையில் கூறிஞர்

கடந்த அரசாங்க காலங்களில் இருந்து வந்த அரசியல் தலையீடுகள் குறித்து கண்டித்த திரு. ஆரியவன்ஸா இந்த அரசாங்கத்திலும் அது தொடருவதாக குறிப்பிட்டார்.

## யாழ். சிறைச்சாலையில் சமய உபந்நியாசங்கள்!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம்சைவபரிபாலனசபை ஆதரவில் யாழ்ப்பாணம் அரசினர் சிறைச்சாலையிலுள்ள சைவசமயக் கைதிகளுக்கான [illegible] லும், திருமுறைகளை ஓதுதல் புராண படனங்களைக் கேட்டல், சிந்தித்தல் அவசியமாகும். ஆலயங்கள் தோறும் புராணபடனங்கள் நடை[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை, நவ 8

'அமெரிக்காவைப் பொறுத்தவரை மூன்றில் ஒரு பகுதியினர்தான் பல்கலைக்கழகப்பட்டப் படிப்பு படிக்கின்றனர். மற்றவர்கள் உயர் கல்விமுடிந்தவுடன்தொழில் துறைக் கல்வி பயில்கின்றனர். இதனால் அறிவியலையும், தொழில்நுட்பத் திறனையும் பயன்படுத்தும் முழு ஆற்றலை அமெரிக்கா பெற்றுள்ளது'

இவ்வாறு உலக நாடுகள் சென்று திரும்பிய கல்வித்துறை அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் வை எம் சி. ஏ. பட்டிமன்றத்தின் சார்பில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்கள் தங்கள் விருப்பத்திற்குகந்தபடி மாணவர்களை உருவாக்க பாடத்திட்டங்களை வகுக்கும் உரிமை பெற்றுள்ளது என்றும் அதனால் மாணவர்களின் கல்விமுறை மாணவர்களின் தகுதிகண்டு அந்தத்துறையில் பயிற்றுவிக்கப்படுகிறது என்றும் கூறினார்.

சிங்கப்பூரில் பள்ளிகள் மூன்றுஷிப்டுகள் வேலைசெய்கின்றன என்றும், இந்த ஷிப்டு முறையை இங்கு அமுலாக்கினால் கட்டிடங்களுக்காகவும் மற்றக்கருவிகளுக்காகவும் செலவாகும் பணம் மிகுதியாகும்என்றும் கூறினார்.

# அரபு எல்லைகளைக்கைப்பற்ற இஸ்ரேல் விரும்பவில்லை

நியூயோர்க். நவ. 8

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. ரோஜஸை இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் இபான் இன்று சந்தித்து மேற்காசியப் பிரச்னை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தைகள் மிகவும் பயனுள்ளமுறையில் அமைந்தன என அமெரிக்கா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே நேரத்தில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு.தாயன் மேற்காசிய சமாதானத் தூதுவர் டாக்டர் ஜாரிங்கைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அரபு நாடுகளின் எல்லைகளைக் கைப்பற்றுவதில் இஸ்ரேலுக்கு நாட்டமோ அல்லது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதில் நாட்டமோ இல்லை என திரு ஜாரிங்கிடம் தயான் எடுத்துச் சொன்னதாக ஏஜன்சிச் செய்திகள் கூறின.

பல்கலைக்கழக

# விஞ்ஞான பிரிவுத் தெரிவில் தாமதம்; காரணம் இதுவாகும்

கோட்டை, ஞாயிறு

பாடசாலை அதிபர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிகோரும் விஞ்ஞான மாணவர்களின் விண்ணப்பங்களை மேலொப்பமிட்டு அனுப்புவதில் தாமதிப்பதினால் விஞ்ஞான மாணவர்களைத் தெரிவுசெய்வதில் தாமதம்ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

விண்ணப்பிக்கும்தகைமையுடைய மாணவர்கள் அந்தந்தப்பாடசாலைஅதிபர்களின் ஊடாக உயர்கல்விச் சபைக்கு விண்ணப்பிக்க வேண்டியது வழமைஆனால் சில அதிபர்கள் இறுதியில் வீணகத்தாமதம் செய்வதால் விஞ்ஞான மாணவர்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

உயர்கல்விச்சபை இந்த வராத்துக்குள் சகலவிஞ்ஞான மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வந்துவிடுமென எதிர்பார்க்கிறது கலைப்பிரிவு, வைத்தியப் பொறியியல் பிரிவு போன்றவற்றுக்கான மாணவர்பட்டியல் கடந்தவாரமே தயாராகி விட்டது.

உயர்கல்விச்சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களை பல்கலைக்கழகம் தற்போது ஆராய்ந்து வருகிறது ஆயினும் இவர்களுக்கு நவம்பர் 15ம் திகதி புதிய அனுமதிகிடைக்குமோ என அஞ்சப்படுகிறது மாணவர்களால் கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியாகக்கொடுக்கப்பட்டுள்ளனவா என்றும் ஜி ஸி ஈ சாதாரணப் பரீட்சையில் தேவையான [பாடங்களில் அவர்கள் சித்திபெற்றிருக்கிறார்களா என்றும் பரிசீலனை செய்யவேண்டியிருப்பதால் இதில் பலத்த தாமதம் ஏற்படலாம் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன இவற்றை ஆராய்ந்துமுடிக்க சிறிது காலம் தேவை என்றும் ஒரு உயர்தர அதிகாரி சொன்னார்

1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 17-ந் திகதி நேதாஜியைஏற்றிச்சென்ற விமானமும்மிலை மதிப்புள்ள ரத்தினங்களும் வைரங்களும் விடப்பட்டிருந்தன.

அமெரிக்க பிரிட்டிஷ்குழுக்களின் அறிக்கைகளின் பிரதிகளையும் ஜப்பானிய தலைமை நிலையத்திலிருந்து ஆகஸ்ட் 17-ந் திகதி விமானம் புறப்பட்டதாகவும் தைக்கொகுவில் விபத்து ஏற்பட்டு நேதாஜி மரணமானதாகவும் அனுப்பப்பட்ட வயலஸ் செய்தியின் பிரதியையும் எடுத்தோம்.

திரு,ஜே பிமித்திராவினால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபொழுது திரு. டீ தெரிவித்ததாவது?-

விமான விபத்தின் நேர்சாட்சியங்கள் கிடைக்கவில்லை என்றும் பல பிரதிகளைத்தான் டில்லிக்குக் கொண்டு வந்ததாகவும் இந்திய ஆட்சி கைமாற்றப்பட்ட பொழுது மிகவும் நம்பிக்கையான தஸ்தாவேஜுக்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்'

திரு, சன்யால் கூறியதாவது: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பலான 'இமிட்ஷியாரு' வின் அதிகாரியான கசுக்கிக்கோ நேதாஜியின் காரை சிங்கப்பூரில் பயன்படுத்தி வருகிறார். அவர் சுபாஸ் சந்திரபோசும் இன்னொரு ஜப்பானிய ஜெனரலும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் மூலம் 1945 ஆகஸ்டின் இறுதிப் பகுதியில் யாருக்கும் தெரியாத ஒரு இடத்துக்குச் சென்றனர். நேதாஜியின் காரில் இரண்டு வாள்கள் இருந்ததாகவும் அதில் ஒன்று நேதாஜியினுடையது என்று கசிக்கிக்கோ கூறினார் நேதாஜி இந்தியாவிலேயே இருக்கிறார் என நம்புகிறேன்' ஆனால் என்னால் அதை நிரூபிக்கமுடியவில்லை.

இந்த விசாரணையின் பொழுது நீதிபதி கோஸ்லா நேதாஜி விடயத்தில் தாங்கள் ஒன்றும் செய்யவில்லை எனப் புதுடில்லியிலுள்ள ரஷ்யத் தூதுவர் விடுத்த அறிக்கையைத் தான் கவனத்தில் கொள்ளப்போவதில்லை என்றார்.

முன்னாள் ஆட்சிமன்ற அங்கத்தவரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியுமான டாக்டர் சத்திய நாராயண சின்ஹா 1951ம் ஆண்டுவரை நேதாஜி சோவியத் யூனியன் சிறைச்சாலையில் இருந்ததாகக் கூறியுள்ளார்!

## நேதாஜி தோன்றுவார்

நேதாஜி திடமான ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூருக்கு இவ்வருடம் இருமுறை வந்ததாகவும், ராஜஸ்தானைச் சேர்ந்த பழம்பெரும் காங்கிரஸ்காரரான பன்வர்லால் சராப் கூறியுள்ளார்.

ஜோத்பூரில் 'தருண்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார், ஜோத்பூருக்கு நேதாஜி இரகசியமாக வந்தது பற்றி சி. ஐ. டி. பொலிசாருக்கு தெரியுமென்றும், இது பற்றித் தன்னை அவர்கள் விசாரித்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். ஆனால் சி. ஐ.டி சுப்பிரிண்டன் குப்தா மறுத்துள்ளார்.

இந்த விசித்திர நியமனம் அம்பலத்துக்கு வந்தது.

# பெர்லினில்ரஷ்யர் சுடப்பட்டார்

பெர்லின், நவ 8

மேற்கு ஜேர்மனிய பெர்லின்பகுதியில் ரஷ்ய ராணுவ வீரர் ஒருவரை பிரிட்டிஷார் சுட்டனர். ரஷ்யவீரர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார்.

பிரிட்டிஷாரின் இச்செயல் குறித்து பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆழ்ந்த கவலை தெரிவித்தனர், இவ்வித துரதிஷ்ட சம்பவத்திற்காக தங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதாக அவர்கள் மேலும்தெரிவித்தனர். இச்செயல் குறித்து மேற்கு ஜெர்மனி அரசாங்கம் கண்டனம் தெரிவித்தது. இவ்விதமான நிகழ்ச்சிகளினால் பெர்லின் பிரச்னையைத் தீர்ப்பதில் எதிர்காலத்தில் சிக்கல்கள் ஏற்படலாமென அரசாங்கம் அச்சம் தெரிவித்தது.

சுடப்பட்ட ரஷ்ய வீரரை கிழக்கு ஜேர்மனி வான் ஒன்று எடுத்துச்சென்றதை தான் கண்டதாக ஒரு பத்திரிகை நிருபர் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் 14 பேர் பலி

நாம்பென், நவ 8

கம்போடிய தலைநகரில் ஏற்பட்ட விபத்தொன்றில் 14 பேர் கொல்லப்பட்டார்கள். பலர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்!

கம்போடிய தலைநகரான நாம்பென்னில் சினிமாத் தியேட்டரொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் மாணவர்கள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். இவ்விபத்து நடக்கும்பொழுது அங்கே 700 பேருக்கு மேல் இருந்தார்களென செய்தி ஒன்று கூறுகிறது.

ஆண்டு ஆராய்ச்சி மேற்கொண்டிருக்கிறது பிரிட்டிஷ் அணுசக்தி கமிஷன் ஆராய்ச்சி முடியும் தறுவாயில் இப்போதுள்ளது. இது குறித்து கமிஷன் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் இந்தமுறை மிக சிக்கனமானது, வர்த்தக ரீதியில் சாத்தியமானது என்று ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் உப்பு மட்டுமின்றி, தண்ணீரில் கலந்துள்ள பிற அசுத்தங்களையும் இந்த முறையில் நீக்கிவிடலாமென்று கூறுகிறது கமிஷன்.

கடல்நீரிலிருந்து உப்பை நீக்கி, அதனை குடிநீராக்கும் முறையை முதலில் அறிமுகப்படுத்தியது பிரிட்டன் தான். உலகில் பல நாடுகளிலுள்ள இந்த திட்டங்களில் பாதிக்கு மேற்பட்டவை பிரிட்டன் அமைத்தவையாகும்.

# விளையாட்டு மந்திரி கலந்துகொள்வார்

சாய்ந்தமருது, ஞாயிறு

கல்முனை மாவட்ட விளையாட்டு ரசிகர் சங்கம் அம்பாறை மாவட்டத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகளுக்கிடையே தற்போது ஜனாப் ஸி. ஏ. காதர் முகைதீன் வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் மக்கள் அரசாங்கத்தின் விளையாட்டுத்துறை அமைச்சரான திரு. கே. பி. ரத்னாயக்கா பிரதம அதிதியாக கலந்துகொண்டு வெற்றி பெற்ற கழகத்துக்கு வெற்றிக் கிண்ணத்தைப் பரிசளிப்பார். இத்துடன் மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கும் அன்றைய தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றுவார்.

சம்பாந்துறை சுவீட மஜீத், நிந்தவூர் அல்-அஸ்ரக், கல்கினை மோனிங் பஸார் 'ஏ-பி', கல்முனைஅரசாங்க சேவை, அக்கரைப்பற்று 'ஏஸ்', மருதமுனை இளைஞர் விளையாட்டுக் கழகம் கல்முனை குவாண்டர்ஸ் ஆகிய 8 கழகங்கள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டிகள் அதிகமானவை கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

இச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா எதிர் வரும் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று கல்முனை வெஸ்லிப் பாடசாலை திறந்தவெளியரங்கில் நடைபெறும். கல்முனை எம். பி. ஜனாப் எம். ஸி. அகமது இதற்கு தலைமைவகிப்பார்.

# கந்தர் அனுபூதி

உடுப்பிட்டி, ஞாயிறு

"உலகில் எமக்குப் புகழ் அல்லது இகழ் வந்தாலும் அவற்றைச் சிறிதேனும் அலட்சியப்படுத்தாது வாழ்வதுதான் கர்மயோகத்தின் நெறி இன்றைய மக்களின் தடுமாற்றத்திற்கும் பயமின்மைக்கும் அநுபூதி ஒரு உயர்ந்தமருந்தாகும். முருகனை நினைந்து பாடிய பாடல்கள் தான் கந்தர் அநுபூதியிலுள்ளன. கந்தர் அனுபூதியிலுள்ள பாடல்கள் 51-ம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'பயனைத்தரும்."

மேற்கண்டவாறுபருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரமத்தில் "கந்தர் அநுபூதி" என்னும்பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் பிர. இரத்தின சபாபதி குறிப்பிட்டார்.

வாய்மைத் திறத்தாலும் பக்தி மார்க்கத்தாலும் தூய்மையின் இருப்பிடத்தாலும் நாமனைவரும் உயர்ந்த வாழ்வையடையமுயற்சி செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# கிணற்றில் விழுந்து தற்கொலை!

உடுப்பிட்டி, ஞாயிறு

வீட்டைவிட்டு வெளியேறியவர் கிணற்றில் பிணமாகக்கிடந்தார். அல்வாய் தெற்கைச்சேர்ந்தசண்முகம் பரஞ்சோதி என்பவரே இப்பரிதாப மரணத்திற்குளானவராவார் முப்பது வயதான இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கங்காணியாக வேலை பார்த்து வந்ததாகவும் கிணற்றில் குதித்துத்தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

மரணவிசாரணை அதிகாரி திரு. க. தாமோதரம் பிள்ளை தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# கொள்வனவு நிறுத்தப்பட்டது

சும்பன், ஞாயிறு

தாளையடியில் இயங்கிவரும் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் இம்மாதம் 7-ம் திகதி தொடக்கம் மீன் கொள்வனவை நிறுத்தியுள்ளது, மாரிகாலங்களில் இப்பகுதிகளில் கடற்றொழில் செய்யப்படாமையே இதற்குக் காரணமாகும். கூட்டுஸ்தாபனம் அடுத்த ஆண்டு மாசிமாதம் தொடக்கம் திரும்பவும் மீன் கொள்வனவை ஆரம்பிக்கும்.

# சமய உபந்நியாசங்கள்!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம்சைவபரிபாலனசபை ஆதரவில் யாழ்ப்பாணம் அரசினர் சிறைச்சாலையிலுள்ள சைவசமயக் கைதிகளுக்காக அங்குள்ள முருகன் ஆலயத்தில்போயா தினம் தோறும் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி சமய உபந்நியாசங்கள் நிகழ்த்திவருகின்றார். 1-8-70 இல் ஆரம்பிக்கப்பெற்ற கந்தபுராண விரிவுரை 6-11-70 இல் விசேடவழிபாட்டுடன் நிறைவெய்தியது. மூன்று மாதகாலம் தொடர்ந்து நடைபெற்றது.

தர்மத்தின் உயர்வும், அதர்மத்தின் வீழ்ச்சியும் கந்தபுராண வாயிலாக அறியாலம். ஆன்மாவை பல வகையான துன்பங்களுக்குள்ளாக்கும் மும்மலமாகிய ஆணவம், கர்மம், மாயை ஆகியவற்றை ஒழிக்க ஆண்டவன் அருள் வேண்டும். அதற்கு ஆலயவழிபாடு இன்றியமையாதது: அதிலும், திருமுறைகளை ஓதுதல் புராண படனங்களைக் கேட்டல், சிந்தித்தல்அவசியமாகும். ஆலயங்கள் தோறும் புராணபடனங்கள் நடைபெறவேண்டும், சைவமயத்தின் பரந்த நோக்கை மக்கள் உணரவேண்டும், மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்' எனக்கச்சியப்பர் சூரபதுமனை முருகப்பிரான் ஆட்கொண்ட தன்மையைத் தெளிவாக்குகின்றார். எனவே ஐம்புலன் வழி சென்று நாங்களும் பல குற்றங்களைச் செய்து விடுகின்றோம். அவற்றை எல்லாம் நாம்பிழை என்று உணர்ந்து ஆண்டவனிடம் முறையிட்டால் வாழ்வில் திருந்த இடமுண்டு. எனவே ஆலயங்கள் யாவும் மக்களுக்குப் போதனையையும் சாதனையையும் அளிக்கும்இடமாக அமைய வேண்டும் என சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி குறிப்பிட்டார்.

# கணக்கியலில் எந்த முறையை பயன்படுத்துவது?

## ஆராய கமிஷன் நியமிக்கப்படும்

உடுப்பிட்டி, ஞாயிறு

கணக்கியலில் வரவு செலவு, பற்று பரவு என்பதில் எம் முறையைப் பயன்படுத்துவதென்பது பற்றி நீண்டகாலமாகப் போதனாசிரியர்களிடையேயும், மாணவர்களிடையேயும், ஏற்பட்டு வந்த பிரச்னை மிக விரைவில் தீரப்போகின்றது. கணக்கியலில் வரவு-செலவு என்னும் முறையையா, பற்று-வரவு என்னும் முறையையா தொடர்ந்து நடைமுறையிலிடுகக அனுமதிப்பது என்பதுபற்றி ஆராய்ந்து ஏகோபித்த முடிவெடுக்க ஒரு கமிஷன் நியமிக்கப்படவுள்ளது.

இக் கமிஷனில் ஈழத்துப் பிரபல சார்ட்டட்அக்கவுண்டன்கள் அங்கம் வகிப்பார்கள் இலங்கையில் பெருவாரியான வர்த்தக நிலையங்களிலும், திறை சேரியிலும். யாழ் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியிலும் கணக்கியலில் பற்று-வரவு என்றும் முறையே கையாளப் பட்டு வருகின்றபோதிலும் பரீட்சைப் பகுதிமட்டும் வரவு-செலவு என்னும் முறையைக் கடைப்பிடித்து வருவது பற்றி வியப்புத் தெரிவிக்கப்படுகிறது.

பற்று- வரவு முறையில் கணக்கியல் பயின்ற மாணவர்கள் இதனால் பரீட்சைகளில் திகைப்பும், தோல்வியுமடைந்து வருகின்றார்களாம். யாழ் கனிஷ்ட தொழில் நுட்பகல்லூரி இது விடயமாக இருபது பிரபல வர்த்தக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்ட பொழுது அவ்வர்த்தக நிறுவனங்கள் 'பற்று-வரவு' முறையையே சிபார்சு செய்துள்ளனவாம்.

யாழ் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்குப் பதிவாளர் பயிற்சி மாணவர்கள் பற்று-வரவு முறையிலேயே கணக்கியல் பயின்று வருவதாகக் கணக்கியல் போதனாசிரியர் திரு. கோமஸ் தெரிவித்தார்.

# இசைமேதையின் மறைவுக்கு அனுதாபம்

தாவடி, ஞயிறு

"மலையில் விளக்கென இசை உலகில் பிரகாசித்த பல சிறந்த வித்வான்களை உருவாக்கிய பெருமையுடையவர், இசைமேதை-வயலின் வித்வான் கும்பகோணம் திரு. ராஜமாணிக்கம்பிள்ளை உயரிய பாணியில் வயலின் இசைத்து நாளும் இசைத்தொண்டாற்றியவருமாவார். அன்னாரின் மறைவு இசையுலகிற்குப் பேரிழப்பாகும்" என திருநெல்வேலி நந்திஇசைமன்ற மாணவரும், ஆசிரியரும் கூடி மறைந்த இசைமேதைக்கு அஞ்சலிசெலுத்திய வைபவத்தில், "மிருதங்கமணி" எம். என், செல்லத்துரை கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சாதிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரேவழி என்னவென்றால் மேலே இருப்பவர்களைக் கீழே தள்ளுவதன்று; கீழே உள்ளவர்களையும் மேலே இழுப்பதாகும். இதுவே சிறந்த வழியாகும்.

— விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 23-ந் திகதி (9-11-70)


## வர்த்தகர், தொழில் அதிபர்கள் கவலை

இலங்கையிலே இப்போது தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்கள், தொழில்கள் இவற்றை நடத்தி வருபவர்களிடையே பெரும் கவலையும் கலக்கமும் ஏற்பட்டுள்ளன. திடீர் வேலை நிறுத்தங்கள், விலைக் கட்டுப்பாடுகள், புதிய வரிவிதிதங்கள் முதலியன ஒருபுறம் இருக்க வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனங்களை அரசாங்கமே கையேற்கும் (பறிக்கும்?) மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டிருப்பது வர்த்தக கைத்தொழில் வட்டாரங்களில் கவலையையும் பீதியையும் அதிகரித்திருக்கின்றது. இனி தாங்கள் தொடர்ந்து அவற்றை நடத்தமுடியுமா, சோஷலிச அரசாங்கத்தில் தங்களுக்கு இடமுண்டா என்றும் அவர்கள் திகைப்பதாயின் அதில் வியப்பில்லை.

எமதர்மராஜனின் தலைக்குமேல், ஒரு பெரிய கல் மயிரிழையில் தொங்கிக் கொண்டிருக்குமாம். அவர் ஏதாவது ஒரு தவறு செய்துவிட்டால் அந்தக் கல் அவர் தலைமீது விழுந்து, தலை நசுங்கிவிடுமென்று ஒரு கதையுண்டு. அதாவது ஒரு சிறிய தவறும் செய்துவிட்டால் ஆளுக்கே ஆபத்துதான்' அதேபோல வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனங்கள் தெரிந்தோ, தெரியாமலோ சிறிய தவறு செய்துவிட்டால், அந்த ஸ்தாபனத்தையே அரசாங்கம் திடீரென எடுத்து தங்களை விரட்டிவிடுமோ என்று பயப்படுகின்றனர். ஒரு வர்த்தக ஸ்தாபனத்தையோ, கைத்தொழிலையோ ஆரம்பித்து, வெற்றிகரமாக நடத்துவதென்பது இலேசல்ல. எல்லாராலும் இது முடியாது. இதற்கு விசேஷ நிர்வாகத் திறமையும், தொழில்நுட்ப அறிவும், அனுபவமும் தேவை, திற

லாக்கஷ்டம் அதிகரிப்பதுடன் நாட்டின் பொருளாதாரமும் மேலும் சீர்குலையுமென்பது அவர்களுக்குத் தெரியும்.

என்றாலும், வர்த்தக கைத்தொழில் (கையேற்கும்) மசோதாவை அரசாங்கம் இச்சமயம் கொண்டு வருவானேன்? இதன்நோக்கமென்ன?) வர்த்தகதொழில் ஸ்தாபனங்களை இம்மசோதா எவ்வளவு தூரம் பாதிக்கும்? என்பதைப் பற்றி நிதானமாக யோசிக்கவேண்டும். நூறு பேருக்கு மேற்பட்டு வேலைசெய்யும் ஸ்தாபனங்களையே இம் மசோதா பாதிக்குமேயன்றி, சிறிய வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனங்களை அல்ல. மேலும் எந்த ஸ்தாபனத்தை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்வதாயினும் முதலில் அதைப் பற்றி ஒரு மசோதா கொணர்ந்து பார்லிமெண்டில் விவாதம் நடந்து நிறைவேறியதன் பின்பே அந்த ஸ்தாபனம் கையேற்கப்படுவதாக இருக்கும். இங்கு அரசாங்கம் நடத்தும் தொழில்கள் பொதுவாக லாபத்துக்கு பதில் நஷ்டத்திலேயே நடப்பதால், எந்த தக்க காரணங்களுமில்லாமல், அவசரப்பட்டு அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுக்கத் துணியாது. பொதுமக்களின் நாட்டின் நன்மைக்காகத்தான் வர்த்தகம், தொழில் இவை நடக்கவேண்டுமேயொழிய, ஒருசில தனிப்பட்டவரின் நன்மைக்காக அல்ல. போட்டமுதலுக்கு நியாயமான லாபம் கிடைக்க வேண்டும்தான். ஆனால் கொள்ளைலாபம் சுரண்டல்கள் முதலியவற்றுக்கு இனி இடமளிக்குமென்று யாரும் நினைத்தால், அது ஏமாற்றத்தில்தான் முடியும்.

அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு, தங்களுக்குப் பிடிக்காத வர்த்தக தொழில் ஸ்தாபனங்களைப் பறிக்கவிடுவரோ

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# "கேள்விப் பத்திரங்களெல்லாம் மெம்பர்களுக்கு அனுப்பப்படும்"

# மன்னார் பட்டினசபைசெயலாளர்சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள் 'கேள்விப்பத்திரங்கள் ரெண்டர் பெட்டியில் சீல் செய்து வைக்கப்பட்டிருக்கும். தலைவருக்கு முன்னால் அப்பெட்டி கொண்டுவரப்பட்டு உடனடியாக தலைவரின் உத்தரவின் பேரில் பியோனால் திறக்கப்படும். தலைவர் கேள்விப்பத்திரங்களை தனித்தனியாகப் பரிசீலனை செய்வார். அதன் பின் பியோன் அவற்றைத் திறந்து ஒவ்வொன்றிலும் தலைவர் முன்னிலையில் கந்தோர் முத்திரை இடுவார். அதன்மீது தலைவர் கையெழுத்துப் போடுவார். இதுதான் கேள்விப்பத்திர நடைமுறையாகும்.'

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் சாட்சியமளித்த மன்னார் பட்டினசபை செயலாளர் வெற்றிவேலு மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் 17-வது தினமாக நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினராக வி. ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து யூ. என். பி. சார்பில் போட்டியிட்ட ரஹீம் மனு தாக்கல் செய்திருந்தார். இம்மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

செயலாளர் வெற்றிவேலு சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: கேள்விப்பத்திரங்களை தலைவர் ஒவ்வொன்றாகப் பிரித்து அவற்றில் தவறு, அல்லது அனுமதிக்கக் கூடாத விஷயம் ஏதாவது இருக்கிறதா என்பதைப் பார்ப்பார். பின் மற்றும் அங்கத்தவர்களுக்கும் அனுப்புவர். அங்கத்தவர்களும் அவற்றைப் பார்த்தபின் ரெண்டர் பத்திரத்தில் கையெழுத்டுவார்கள். அவற்றில் தவறு இருந்தால் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்,

அக்டோபர் 26-ம் திகதி நடந்த ரெண்டர் தெரிவிலும் இந்த நடைமுறை இடம்பெற்றது. தொகைகளைச் சரியாக அறிவதற்காகத்தான் ரெண்டர் கோரப்படுவது கேள்விப்பத்திரத்தில் தவறு இருந்தால் அல்லது தகுதி அற்றவர் என்றால் மற்ற அங்கத்தவர்களுக்கு தலைவர் சொல்லுவார் ஒவ்வொரு ரெண்டர் பத்திரம் திறக்கும் போதும் தலைவர் கையெழுத்திடுவார்.

நீதியரசர்: ஒவ்வொரு ரெண்டர் பத்திரத்திலும் அங்கத்தவர்கள் கையெழுத்திடுவார்களா?- ஆம்.

நீதி: ரெண்டர் பத்திரம் ஒவ்வொன்றிலும் மெம்பர்கள் கையெழுத்துண்டா?- ரெண்டர் பத்திரத்தைப் பார்த்துத்தான் சொல்ல முடியும். இப்ப அப்படி நடக்கிறது. முன்பு நடந்தது தெரியாது.

நீதி: எப்பொழுது தொடக்கம் நடக்கிறது?- எப்பொழுது தொடக்கம் என்று சொல்ல முடியாமலிருக்கிறது.

நீதி: நீர் மன்னார் பட்டின சபை செயலாளராகக் கடமையாற்றும் காலம் முதலா அல்லது இந்த வருடம் முதலா?- நான் கடமையாற்ற வந்தபின்.

நீதி: 68-ல் செயலாளராக நியமனம் பெற்றீர்?- ஆம்.

நீதி: 70ம் ஆண்டில் இந்த நடைமுறை இருந்ததா?- ஆம்.

நீதி: 69ம் ஆண்டில் நடைபெற்றதா?- சொல்லமாட்டேன். ரெண்டர் பத்திரத்தை பார்த்துத்தான் சொல்ல முடியும்.

நீதி: இந்த நடைமுறையை அவதானிக்காமலிருந்தீரா?- ஆரம்பித்த பின் அவதானித்தேன்.

நீதி: எது ஆரம்பித்த பின்?- உறுப்பினர்கள் கையெழுத்திடுவது.

நீதி: பட்டினசபைச் செயலாளராக வந்த காலம் முதல், ரெண்டரை முழுக் கவுன்சிலும் பரிசீலனை செய்தது?- ஆம்.

நீதி: தலைவர் ஒவ்வொரு ரெண்டரையும் பரிசீலனை செய்தார்?- ஆம்.

நீதி: அதன்பின் மற்ற மெம்பர்கள் ரெண்டர்களை பார்த்தார்கள்?- ஆம்

நீதி: அத்தனை ரெண்டர்களையுமா அல்லது தவறு உள்ளரெடண்ர்களையா மற்ற மெம்பர்களுக்கு அனுப்புவது?- அத்தனை ரெண்டர்களும் மெம்பர்களுக்கு அனுப்பப்படும்.

வெற்றிவேலு தொடர்ந்து கூறியதாவது:

1969 அக்டோபர் 26ந் திகதி அத்தனை ரெண்டர்களும் மெம்பர்களுக்கு அனுப்பப்பட்டது. எல்லோரும் கையெழுத்திட்டார்களா என்பதைப் பார்த்துத்தான் சொல்லமுடியும். ஒவ்வொரு ரெண்டர்களும் மெம்பர்களுக்கு அனுப்பப்பட்டதென்பதைச் சொல்ல முடியும்.

முதலாவது மாட்டிறைச்சிக் கடை ரெண்டர்களை ஒவ்வொரு மெம்பர்களும் பார்வையிட்டனர் அதன் பின் அட்டவணை தயாரிக்கப்பட்டது.

அட்டவணையில் இலக்கம், கேள்விக்காரரின் பெயர், கடை விபரம் கூறப்பட்டிருந்தது. மற்றக் கடைகளின் ரெண்டர்களையும் தலைவரும், மெம்பரும் பார்வையிட்டனர். அதன் பின் அட்டவணை தயாரிக்கப்பட்டது. இந்த இறைச்சிக்கடைகளின் அட்டவணை தயாரிக்கப்பட்டபோது யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

# கைதடியில் 3-நாள் நடந்த சைவமாநாடு

# சைவ ஆதீனம் நிறுவவேண்டும்

# என்கிறார் உதவி அரசாங்க அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# தமிழ்க் கட்சிகள்

தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பெயர் மாற்றம்பற்றி வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்க்காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சிக் காரியதரிசியும் தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பெயரை ஏன் மாற்றவேண்டும்? என்ற கேள்விக்கு இவ்விருவரும் ஏதாவது பதிலோ அன்றேல் விளக்கமோ கூறவில்லை.

'தமிழர்' என்ற ஒரு இன அடிப்படையிலேயே உருவாக்கப்பட்ட கட்சிகள் என்ற காரணத்தாற்றான் தமிழ் மக்களின் இரு அரசியல்கட்சிகளையும் 'இனத்துவேஷக் கட்சிகள்' என மற்றைய இன மக்கள் கூறுகிறார்கள். சிங்கள மக்களின் மத்தியில் இருக்கும் கட்சிகள் பெயரளவிலாவது ஒரு 'தேசியப்' போர்வையைப் போர்த்திருக்கின்றனவல்லவா?

ஆகவே தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் ஓர் தேசியப் போர்வையைப் போடவிரும்பினால் 'அகில இலங்கைத் தமிழ் சோஷலிஸ்ற் கட்சி' என்பது பொருத்தமில்லை. 'தமிழ்' என்ற பதத்தை நீக்கி "அகில இலங்கைச் சோஷலிஸ்ற்கட்சி' அன்றேல் வேறொரு பொருத்தமான பெயரை இடலாம். எந்தப் பெயரைஇட்டாலும் 'தமிழ்' என்ற பதத்தை நீக்குதல் நன்று. அப்படிச்செய்தால் தேசியக்கட்சி என்ற போர்வையில் மற்றைச் சாகியத்தாரின் ஆதரவையும் பெற முடியும்.

அதேபோல தமிழரசுக்கட்சியாரும் 'தமிழ் அரசு' என்ற சர்ச்சைக்குரிய பதங்களை நீக்கி 'சமஷ்டி' அன்றேல் 'கூட்டாட்சி' என்ற பதத்தைப்பிரயோகிப்பது நன்று.

க. வைரவநாதன்
நியாய துரந்தரர்
கோப்பாய்

## யாருக்காக பஸ் சேவை

இ.போ.ச. பஸ் பாரதிகள் கண்டர்கள் மீது செய்யப்படும் புகார்களில் உண்மை இல்லாமல் இல்லை என்பதை என் அனுபவத்தில் கண்டேன்.

வட்டுக்கோட்டை செல்வதற்காக யாழ்ப்பாணத்திள்ள ஒரு பஸ்தரிப்பு நிலையத்தில் எனது பேத்தியாரும் நானும் காத்திருந்தோம். ஒரு இரட்டைத் தட்டு பஸ் போதியளவு சனங்கள் இல்லாதிருந்தும், எம்மை ஏற்றிச் செல்லாது சென்று விட்டது.

இதில்என்னவேடிக்கையென்றால், பஸ் சாரதிபஸ்ஸை மெதுவாக] எமது பக்கத்தில் நிறுத்த முயற்சித்தபோது என்னப்பா, இப்படி யென்றால் எப்படி நேரத்துக்குப் போவதுநிற்பாட்ட வேண்டாம்போ...... என்று சாரதியைப்பார்த்துக் கொண்டக்டர்கூறினார்.

உடனே பஸ் சாரதிபஸ்ஸை நிறுத்தாமல் போய் விட்டார்.

ஏதோ நேரத்திற்குப் போக வேண்டுமென்பதற்காக பிரயாணிகளை அலட்சியம் செய்துவிட்டு பஸ்பறந்துவிட்டது

பிரயாணிகளுக்காகவே சேவையிலீடுபடும் பஸ் வெறும் பஸ்ஸாகப் போகிறது.

அரசாங்கம் இப்படிப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆர், எஸ்.
வல்வெட்டி.

......

## 12 கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படும்

குருநாகலை, ஞாயிறு

கிராம அபிவிருத்தி, குடிசைக்கைத்தொழில் இலாகா வட-மேற்கு மாகாணத்தில் 12 புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிறது.

குருநாகல் மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கைத்தொழில் அமைச்சர் திரு. ரி பி சுபசிங்கா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இக்கைத்தொழில்கள் இப்பகுதியில் உள்ள வேலையில்லாப் பிரச்னையைப் போக்கும். இம்மாகாணத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு தொழில் நிறுவப்படும் என அவர் மேலும் கூறினார்

......

## கருத்தரங்கம்

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பளை, மகாஜனக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் இலக்கிய கருத்தரங்கம் ஒன்றை நடாத்தினார்கள்

தென்பது இலேசல்ல. எல்லாராலும் இது முடியாது. இதற்கு விசேஷ நிர்வாகத் திறமையும், தொழில்நுட்ப அறிவும், அனுபவமும் தேவை, திறமையில்லாத காரணத்தால் எவ்வளவோ பேர் வர்த்தகத்திலும் தொழிலும் போட்ட பணத்தையும் இழந்து ''பாப்பராகி'' இருப்பதைப் பார்க்கின்ருேம்.

இந்த விஷயம் பிரதம மந்திரிக்கும், நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவுக்கும் தெரியாதிருக்கமுடியாது. எல்லாத் தொழில்களையும், வர்த்தகத்தையும் தனிப்பட்டவரிடமிருந்து பறித்து, அவற்றை தேசஉடமையாக்கிவிடமுடியாதென்று அவ்விருவரும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர். வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்து நிதி அமைச்சர் என். எம். செய்த அரிய பிரசங்கத்திம், தோட்டங்கள், வங்கிகள் முதலியவற்றை தேசியமயமாக்குவதாகக் கூறவில்லை, பலர் அஞ்சிய அளவுக்குக் கடுமையான யோசனை அதில் இல்லையென்பது மெய்தான் ஏனெனில் கண்மூடித்தனமாக தேசியமயக் கொள்கையைக் கைக்கொண்டால், வர்த்தகமும் கைத்தொழிலும் நசிந்து, வேலையில் முடியும்.

அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு, தங்களுக்குப் பிடிக்காத வர்த்தக தொழில் ஸ்தாபனங்களைப் பறித்துவிடுவரோ என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு இடமின்றி, தொழில் நிர்வாகிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், அரசாங்கம் இவர்களது பிரதிநிதிகளடங்கிய ஒரு ஆலோசனைச் சபையை அமைத்து, இவ்விஷயமாகக்கலந்துபேச வாய்ப்பளிக்க வேண்டும். எந்த அரசியல் கட்சிக்கும் வர்த்தக ஸ்தாபனங்கள் பணம் கொடுக்கப்படாதென்று சட்டமூலம் தடுக்கவேண்டும். கருத்து வேற்றுமை ஏற்படுகையில், ஒரு நீதிசபைக்கு 'அப்பீல்' செய்து கொள்ளவும் சட்டத்தில் இடமளிப்பதன் மூலம் வர்த்தகர்களின் பீதிகுறையக் கூடும். இம்மசோதாவில் தக்க திருத்தங்கள் செய்து நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் இதனால் பாதகமெதுவுமின்றி நன்மை ஏற்படவும், தொழில் அமைதி கெடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# மூன்று தமிழ் எம்.பி.க்கள் கட்சி மாறுவார்களாம்?

கொழும்பு, ஞாயிறு

பிரதான தமிழ்க்கட்சியொன்றைச் சேர்ந்த மூன்று ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் தங்கள் கட்சியிலிருந்து விலகக்கூடும்' என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இவர்களில்இருவர் வடக்கு மாகாணத்தையும் ஒருவர் கிழக்கு மாகாணத்தையும் சேர்ந்தவர்களாம் தமிழ்க் கட்சிகளில் தமிழரசுக்கட்சிக்கே கிழக்கு மாகாணத்தில் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் இருப்பதால் மேற்படி மூன்று அங்கத்தவர்களும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படுகிறது. இப்படியொரு செய்தியை சொழும்பு 'ஒப்சேவர்' வெளியிட்டிருக்கிறது

தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு செ.குமாரசூரியர் கிழக்கு மாகாணத்தில் லங்கா சுதந்திரக்கட்சிக்குள்ள ஆதரவைப்பற்றிக் குறிப்பிடுகையில், 'கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான இளைஞர்கள் சுதந்திரக்கட்சியை ஆதரிக்கிருர்கள். சில ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் கூட சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார், (சி பி ஏ)

.......

## 'பேரிழப்பு'

தாவடி,ஞாயிறு

'பண்ணென்ற இசை பாடும் அடியார்கள் குடியாக, மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன். என்ற ஞானசம்பந்தசுவாமிகளுடைய திருமுறைப்பாடலுக்கேற்ப, சைப்பணிபுரிந்து மண்ணுலக நல்வாழ்வையும் பல சிறப்புக்களையும்பெற்ற இசைமேதை, வயலின் வித்துவான் கும்பகோணம். ராஜமாணிக்கம் பிள்ளை மறைவு பேரிழப்பு'.

தாவடி திருமுறை இசை மன்றத்தின் செயலாளர் தேவார ஆசிரியர் திரு எஸ். இராசையா, காலஞ்சென்ற இசை மேதைக்கு அஞ்சலி செலுத்து கையில் மேற் கண்டவாறு கூறினர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சைவ ஆதீனம் நிறுவவேண்டும் என்கிருர் உதவி அரசாங்க அதிபர்

— ஆ.கந்தையா —

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் ஏழாவது சைவ மாநாடு இம்மாதம் 4,5, 6-ம்திகதிகளில் கைதடி மூத்தியாவத்தை வீதியில் கோலாகலமான முறையில் நடைபெற்றது.

முதல்நாள் நிகழ்ச்சிகள் சங்கதலைவர் திரு. சு. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றபோது கைதடிகிராம சபைத் தலைவர் திரு இ செல்லையா மாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசினர். தலைவர் தமதுரையில், ''பிற உயிர்களுக்கு ஊறு உண்டாகாமல் வாழ சமய அறிவுதேவை.எனவே சமய வாழ்க்கை முறையை எந்தவொரு மனிதனும் பின்பற்றவேண்டும்'' எனக்குறிப்பிட்டார்.

மாநாட்டுத் தீர்மானங்களை சங்கப்பொதுச் செயலாளர் திரு. ஆ. கந்தையா சமர்ப்பித்துப் பேசுகையில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களை புனித நகராக்குமாறும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் நினைவு முத்திரைகளை வெளியிடச்செய்ய வேண்டுமெனவும் இம்மாநாடு அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதாகத் தெரிவித்தார். வேறுசில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில்இந்துசமயம் போதிக்கச் சகல வசதிகளும் செய்யப்படவேண்டுமெனவும் சைவ அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு விடுமுறை வழங்கவேண்டுமெனவும் இந்து ஆலய பரிபாலன மசோதாவை உடனடியாக செயல்படுத்துமாறும் அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதாகத் தீர்மானிக்கப் பட்டது.

மற்றும் திரு. வ. சுப்பையா, திரு. சி சு சின்னத்தம்பி, திரு சோ. தேவராசா ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்திஞர்கள். கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை, கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை ஆகிய இடங்களில் திருவைந்தெழுத்துப் போட்டிகளும் நடைபெற்றன.

## இரண்டாம் நாள்

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமதுரையில், புனிதப்பிறவியாகிய மனிதப்பிறவியெடுத்தவர்களைத் தெய்வமாக்கித் தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வாழவைப்பது சமயம். சமயம் மார்க்கம். நெறி என்பன ஒரு பொருட் கிளவிகள். எல்லாச்சமய உண்மைகளையும் தன்னகத்தே அடக்கி மேன்மைபெற்று எந்நாட்டவராலும் புகழப்படும் ஒரு சமயமாக விளங்குவது சைவசமயம். மேன்மைகொள் சைவநீதி அறிவுலகெங்கனும் விளங்குவது மிகமிகப் பொருத்தமானது எனக்குறிப்பிட்டார். சைவ ஆதீனம் ஒன்று இலங்கையில் நிறுவவேண்டும், இதற்கு இந்துசமய சங்கங்கள் முன்வரவேண்டும் என்றும் அவர்குறிப்பிட்டார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய முன்னுள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் மாநாட்டை தொடக்கி வைத்துப்பேசுகையில், பல நாடுகளில் இளைஞர்களே சமய சமுதாய அரசியல் வாழ்விலே காலத்துக்கேற்ற இன்றியமையாத வளர்ந்தோர் செய்யமுற்படாத சீர்திருத்தங்களை செய்துவருகின்றனர் என்றும் எங்கள் சமய இளைஞர்களும் இத்தகைய சங்கங்களை அமைத்து தொண்டாற்ற முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சிவநெறிக்காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி தமது ஆசியுரையில் 'இந்தச் சரீரம் முத்தி சாதனம்' இவற்றை எல்லோரும் நன்கு சிந்திக்கவேண்டும். ஆன்மாக்களை ஆணவமலம் அநாதியே பீடித்திருப்பதால் ஆன்மாக்களின் இயல்பான உபகரிக்குந்தன்மையும் பேதமற்ற அன்புநிலையும் மறைபட்டுக்கிடக்கின்றன. அந்த மறைப்பை நீக்கி முத்தியை அடைவதற்கான வழிகளை காணவே பரம்பொருள் ஆன்மாக்களுக்காக இந்த உலகத்தையும் சரீரத்தையும் உதவியிருக்கின்ருர் எனவே ஆன்மாக்கள் ஆணவச் சேர்க்கையாலே தங்களுக்கேற்பட்ட கொடூரத் தன்மையை நீக்குதற்கு அல்லும் பகலும் முயற்சிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மற்றும் சைவப் புலவர் க. சிற்றம்பலம், சி. கணபதிப்பிள்ளை ஆகியோரும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரரங்கில் நடைபெற்ற இம்மாநாட்டில் கைதடியூர் இசைச்செல்வன் சி. தங்கவேலு குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும், அளவை இசைக் கலாமன்றத்தைச் சேர்ந்த செல்வன் சி சிவானந்தராசா, செல்வன் சிறீஸ்கந்தராசா, செல்வன் வி சிவஞானசேகரம் ஆகியோருடைய பக்திப்பாடல்களும் இடம்பெற்றன. சைவமாநாட்டுப் பேச்சுப் போட்டிகள் கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் திரு.நா.இளையப்பா தலைமையில் நடைபெற்றது. இறுதியாககைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை மாணவிகளின் சிவநடனமும் இடம்பெற்றது. திரு. ச. அம்பிகைபாகன் அவர்களினுல் கைதடியூர் இசை சி. தங்கவேலு அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

## மூன்ரும் நாள்

மூன்ரும் நாள் நிகழ்ச்சிகள் சுவாமி விபுலானந்தர் அரங்கில் ஊர்காவற்றுறை ஆட்சிமன்றஉறுப்பினர் திரு கா.பொ.இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர்தமது தலைமையுரையில் 'சைவம் என்பது சாதனையைப் பொறுத்தது. சாதனை செய்யும் அளவிற்கு சைவத்தின் உண்மையை மனிதன் தெரிந்துகொள்கின்ருன். சாதனை இல்லாமல் சாத்தியம் இல்லை. எனவே ஒவ்வொருவரும் சமய சாதனையுடையவர்களாகத் திகழவேண்டும்'என்ருர்.

நாம்ஒவ்வொருவரும்ஆணவத்தை அகற்றி, அகங்காரத்தைநீக்கி அறியாமையை உலகத்திலிருந்து நீக்கி உண்மையை அறியவேண்டும். சமயநெறி என்ருல் கோவிலுக்கு போவதினுல் மட்டும் கைகூடாது உள்ளத்திலேயே தங்கியிருக்கின்றது. உள்ளத்தை நல்வழியில் தூய்மைப்படுத்தி வாழ்ந்தால் வாழ்வில் கஷ்டங்கள் பிரச்னைகள் தலைதூக்க முடியாது சமுதாயத்தை சமயம் மூலம் திருத்தி அமைக்க வேண்டும் நாமும் பிறரும் வாழ சமுதாயம் தானகவே வளரும். பல்லாயிரம் ஆண்டுகளாக சைவசமயம் வளர்ந்து சிறந்து விளங்குகின்றது சுயநலமில்லாததுதான் சிவநெறி. சிவநெறிதான் அன்புநெறி. இன்றைய உலகம்விஞ்ஞான யுகம். அதற்கேற்றபடிமூடக் கொள்கைகளை நீக்கி சமயத்தை தூய்மைப் படுத்தும் பொறுப்பு இளைஞர்களின் கடன். அதற்கு இச்சைவ மாநாடு ஓரளவாவது பயன்படவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

மூன்ரும் நாள் நிகழ்ச்சிகளை யாழ். மாநகரசபைப் பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம் ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் நாம் எமது மனதை ஒருமுகப் படுத்தும் பொருட்டு கட்டவிழ்த்துத் திரியும் ஆன்மாவை ஒருநிலைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இடங்களே ஆலயங்களாகும். ஆன்மா ஒருநிலைப்படும் போதுதான் ஆன்மீக சக்தி வளரும். அமைதியின் இருப்பிடமாக ஆணவம் ஒடுங்க வேண்டிய இடமாக இருக்க வேண்டிய நம் ஆலயங்கள் இன்று அவற்றுக்கப்பாற்பட்ட நிலையை அடைந்திருப்பதைக் காண்கின்றேன். இந்நிலைமாறவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

கைதடியூர் கலியுகவரத பாலநந்தீஸ்வர தவில் வித்துவான் திரு. கே. பழனிமலை குழுவினரின் தவில் கச்சேரியுடன் ஆரம்பமானது மற்றும் பண்டிதர் வித்துவான் க கணபதிப்பிள்ளை, பண்டிதர் இரா சிவசுப்பிரமணியம் சைவப்புலவர் சு செல்லத்துரை, சைவஇளவல் க சிவதெட்சணமூர்த்தி, சிவச் செல்வன் பொ. இரகுபதி ஆகியோரும் சிறப்புச்சொற்பொழிவாற்றினுர்கள். மாநாட்டில் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சுக்களும் இடம் பெற்றன.

விழாமுடிவில் கைதடி எருதிடல் த.க.பாடசாலை மாணவிகளின் சக்தி நடனமும் கைதடி விக்னேஸ்வரவித்தியாசாலையின் சிவநடனமும், கைதடி மின்னொளி நாடக மன்றத்தாரின் 'இறைவன் இருக்கின்ருன்' என்ற சமய நாடகமும் இடம்பெற்றன. மாநாட்டுப் பரிசுப்போட்டிகளுக்கு திரு, இ. வைத்திலிங்கம் பரிசில்கள் வழங்கினர்.

...ம் செய்துவிட்டு பஸ்பறந்துவிட்டது

பிரயாணிகளுக்காகவே சேவையிலீடுபடும் பஸ் வெறும் பஸ்ஸாகப் போகிறது.


அரசாங்கம் இப்படிப்பட்

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பளை, மகாஜனக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் இலக்கிய கருத்தரங்கம் ஒன்றை நடாத்திஞர்கள்

இக்கருத்தரங்கம் கல்லூரி உயர்தர வகுப்பு தமிழ் மன்ற ஆதரவில் கல்லூரி மண்டபத்தில் திரு. எஸ். சுப்பிரமணியம்தலைமையில் நடந்தது.

## 'ஈழநாடு' ரமழான் குரலொலி



''உலக வாழ்க்கைக்கு உவமை (என்னவென்ருல்) விண்ணிலிருந்து நாம் இறக்கிய நீர் மண்ணிலுள்ள மனிதர்களும், கால்நடைகளும் உண்ணும் செடிகளோடு ஒன்றெனக்கலந்து (அச்செடிகள் பூத்துக்காய்த்து) பூமி அதன் அழகைப்பெற்று வனப்பு மிகு தோற்றத்தில் (இருக்கும் போது வந்து பார்வையிட்ட) நிலச் சொந்தக்காரன் (அறுவடைசெய்து) அவையனைத்தையும் அடைந்துகொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டான்.(அப்போது) எங்களின் ஆணை இரவிலோ அல்லதுபகலிலோ அங்கேவந்துற்றது எனவே அதை நாம்நேற்று அவ்விடத்தில் அது இருக்கவில்லை என்றெண்ணக்கூடியவாறு அழித்துவிட்டோம்.'' இவ்விதமே சிந்திக்கும் கூட்டத்தாருக்கு அத்தாட்சிகளை தெளிவு படுத்துகிருேம். அல்லா சாந்தி நிலையத்திற்கு (மனிதர்களை) அழைக்கின்ருன்.

## (சதகல்லாஹுல் அழீம்)

(கலாமுல்லாஹ்: 10-ம் அத்தியாயம் 24, 25-ம் வசனம்.

கோபுரத்தின் சிகரத்தில் குடியிருப்போம் என்றெண்ணி கட்டிய சிகரத்தில் காலடி வையாதோர் எத்தனைபேர்?

பல்சுவை பானத்தைபருகிடலாம் என்றெண்ணி பதத்தோடு செய்திட்ட பழரசத்தால் தன் நாவை நனைத்திட நாதியற்ருேர் எத்தனை பேர்? உலகம் சதம் அன்று. அது இன்று விழித்திருக்கும். நாளை கண்ணைமூடிவிடும். அதன் பளபளப்பிலும், பகட்டிலும் கவர்ச்சிகொண்டவன் ஏமாற்றமடைந்தவன், இறைவனின் கட்டளைமுன் இவ்வுலகு பறந்திடும் பஞ்சு. நித்திய வாழ்வு மறுமையில்தான் உண்டு நல்ல கைங்கரியங்கள் செய்தவன் அங்கே சுவனத்தையும், தீயவை புரிந்தவன் அங்கே நரகத்தையும் அடைவான். நியாயம் வழங்கும் இறைவன் மனிதனை சாந்தி நிலையத் (சுவர்க்கத்) திற்கேயல்லாமல் நரகிற்கு அழைக்கவில்லை.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள் :-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-39 | 5-59 | 12-20 | 3-18 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-24 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org